www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (05.11. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (147) அன்பளிப்பு: 60 p


*அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொதுமக்களின் ஆன்மிக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.*

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

# ஜயசுக்குறு 3ம் கட்டத்துக்கு ஆயத்தம் கிளிநொச்சி முன்னகர்வு முயற்சியும் தடுப்பு

நவம்பர் 1ம் திகதி காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் தமது முன்னரங்க நிலைகளை விட்டு எல்லைப் புறம் நோக்கி முன்னேறுவதற்கு முயன்ற சிங்கள ஆக்கிரமிப்புப் படையினர் மீது, கடும் எதிர்த்தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் அவர்களை ஓட ஓட விரட்டினர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மூன்று சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அவர்களையும் தூக்கிக்கொண்டு சிங்களப் படையினர் புறமுதுகிட்டு ஓடியதாகவும் களச்செய்திகள் தெரிவிக்கின்றன. பின்னடைந்த இராணுவத்தினர் தமது நிலைகளுக்குள் முடங்கிக் கொண்டனர். அவர்களால் கைவிடப்பட்ட இரு ஏ.கே.எல்.எம்.ஜீ உட்பட சில இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவ்வீரமிகு எதிர்த்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை மகிந்தா, வீரவேங்கை பூமலர் ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டியழிக்கும் புனிதப்பணியில் தமது இளைய இனிய உயிர்களை அர்ப்பணித்துவிட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம். இதற்கிடையில் பாதை திறப்பிற்கென பிரமாண்டமான

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## வவுனியா வீதிகளில் வீசப்பட்ட 31 தமிழர் சடலங்கள்

வவுனியா நகரில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கொல்லப்பட்டு வீசப்பட்டு வருவது சாதாரண விடயமாகியுள்ளது. கடந்த பத்து மாதத்தில் 31 தமிழர் சடலங்கள் வீதியோரங்களில் வீசப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சிங்கள இராணுவத்தினரும் அவர்களின் கைக்கூலிகளுமே இவற்றைச் செய்துவருவதாக வவுனியாச் செய்திகள் உறுதிப் படுத்துகின்றன.

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## ஏழாயிரத்திற்கு மேலான மக்கள் யாழ்ப்பாணத்தில் எழுச்சிப் பேரணி

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியுள்ள யாழ் குடாநாட்டில் தினம் தினம் இராணுவக் கொடுமைகள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதனால் இந்த இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான வெகுசனப் போராட்டங்களில் மக்கள் பெருமளவில் பங்குபற்றி வருவதை சமீபகால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று, 31-10-97 வெள்ளிக்கிழமை யாழ்நகரில் 7000 கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட பிரமாண்டமான மக்கள் பேரணி ஒன்றும் நடாத்தப்பட்டுள்ளது. யாழ் திருச்சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பேரணி நீதியையும் பாதுகாப்பான அமைதியையும் வலியுறுத்தி நடாத்தப்பட்டது. மாலை 4.20 மணிக்கு ஆரம்பமாகிய இப்பேரணியில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்து கலந்து கொண்டனர். போக்குவரத்துத் தடைகள், சோதனைச் சாவடிகள், உயிர் அச்சுறுத்தல்கள் போன்ற பலவிதமான இராணுவ தடைகளையும் பொருட்படுத்தாது திரண்டு வந்த இம்மக்கள் வெள்ளம், சந்திரிகா அரசின் உண்மைக்கு மாறான பரப்புரைகளின் போலித்தனத்தை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## பொதுநலவாய எடின்பரோ நகரில் தமிழீழ - ஸ்கொட்லாந்து தேசக் கொடிகள்

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களினது மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த ஸ்கொட்லாந்து தேசத்து எடின்பரோ நகரில் தமிழீழ - ஸ்கொட்லாந்து தேசக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன. அங்கே குழுமி நின்ற ஆயிரத்துக்கும் அதிகமான தமிழீழ மக்களும், ஸ்கொட்லாந்து மக்களும் தேசக் கொடிகள் ஏற்றிவைக்கப் படுகையில் அமைதியாக தேச வணக்கம் செய்தனர். ஸ்கொட்லாந்து தேசக் கொடி, ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. டென்னிஸ் கனவன் அவர்களாலும், தமிழீழத்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...





எடின்பரோ பொதுநலவாய மாநாடு - 97 : ஸ்கொட்லாந்து கொடியுடன் தமிழீழத் தேசியக் கொடியும், பேரணியில் பங்கெடுத்த மக்களின் ஒரு பகுதியினரும்.......

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# கூழாம்குளம் - பன்னாட்டியில் 10 காவலரண்கள் அழிப்பு

அக்டோபர் 25ம் திகதி நள்ளிரவு தாண்டி முப்பத்தைந்து நிமிடத்தில் கூழாம்குளத்திற்கும் பன்னாட்டிக்கும் இடையில் அமைந்த காவலரண்கள் மேல் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், சிறிலங்காப் படைகளின் 10 காவலரண்களை அழித்து அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். எட்டு இராணுவத்தினர் கொல்லபட்ட இந்த வெற்றித்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் அன்ரனி வீரச்சாவெய்தினார். ஆக்கிரமிப்புப் படைகளின் மீதான தாக்குதலில் தமது இளைய இனிய உயிரை அர்ப்பணித்துக்கொண்ட இம்மாவீரனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

இதேவேளை, வன்னிப்பகுதியில் இடம்பெற்ற ரோந்து அணியினர் மீதான விடுதலைப் புலிகளின் மற்றொரு தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயமடைந்ததாக வெளிநாட்டுச் செய்தி முகவர்களின் செய்திகள் தெரிவித்துள்ளன.

கறிப்பட்டி முறிப்பில் 21-10-97ல் நடைபெற்ற மோதலொன்றில் சிறிலங்காப் படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். 20-10-97 இரவு புளியங்குளத்தை அண்டிய பகுதிகள் மீது நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மேல் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிகிறது.

## ஜயசுக்குறு 3ம் கட்டத்துக்கு ஆயத்தம்.....

படையெடுப்பை மேற்கொண்டு, 6 மாதத்தில் 17 கிலோ மீற்றர் கூட நகரமுடியாத சிறிலங்காப் படையினர் தமது படையினரில் பத்தில் ஒரு பகுதியினரை இழந்தும், பல கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தும் மீளமுடியாத அதிர்ச்சியில் தவிப்பதும் உலகறிந்த விடயம்.

இதனை மூடிமறைப்பதற்கு இராணுவப் பேச்சாளர் சரத் முணசிங்கா 22-10-97 வியாழக்கிழமை விடுத்த செய்தியில், தமது இரண்டாம் கட்ட நடவடிக்கை பூர்த்தி அடைந்து விட்டதாகவும் இனிப் பாதை திறப்புத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான இறுதியான மூன்றாம் கட்ட நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அறிவித்தார். அத்துடன், விடுதலைப் புலிகளினால் தமது பிரதான பாதை திறப்பு நகர்வு முறியடிக்கப்பட்ட அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத சரத் முனசிங்கா அதனை மூடி மறைக்க, "பிரதான பாதையால்தான் செல்ல வேண்டும் என்பதல்ல" எனப் புதிய விளக்கம் ஒன்றை அளித்திருந்தார்.

சந்திரிகாவினதும், ரத்வத்தவினதும் அரசியல் எதிர்காலம், ஜெயசுக்குறு தோல்விகளால் கேள்விக்குறியாகி வருவதினால் எத்தகைய விலையைக் கொடுத்தாவது மூன்றாவது கட்ட முயற்சியைத் தொடங்க சந்திரிகா அரசு முயற்சித்து வருகிறது. இதனால் 1997/98 ல் யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட 45 பில்லியன் ரூபாவிற்கு மேலான செலவைக்கூட அனுமதிக்க சந்திரிகா அரசு திடசங்கற்பம் பூண்டு நிற்பதாகவும் கூறப்படுகிறது. ஜயசுக்குறுவின் 3வது கட்ட முயற்சிகளை தொடங்குவதற்கு வசதியாக ஜயசுக்குறுவின் இராணுவ நடவடிக்கைகளின் தலைமைக் கட்டளை அதிகாரி பதவிக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ் குடாநாட்டிலும் நான்கு ஜெனரல்களும், இரு பிரிகேடியர்களும் பதவி மாற்றப்பட்டுள்ளனர். மேலும், யாழ் குடாநாடு, மூதூர் பகுதிகளிலிருந்து பல சிறு முகாம்கள் மூடப்பட்டு அங்கிருந்த படைகள் வன்னிக்கு நகர்த்தப்படுகின்றன.

சந்திரிகா அரசின் போர் வெறித்தனத்தை இனங் கண்டுகொண்ட விடுதலைப் புலிகளும் எல்லா முனைகளிலும் சிறிலங்காப் படையினரை எதிர்கொள்ள ஆயத்தமாக இருந்து வருகின்றனர்.

### ஏழாயிரத்திற்கு மேலான...

அம்பலமாகக்கியுள்ளது. அத்துடன் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து நீதி கிடைக்காதவிடத்து இத்தகைய வெகுசனப் போராட்டங்களை தொடர்ந்து நடாத்துவதற்கும் யாழ் குடாநாட்டு மக்கள் தயாராகவுள்ளனர் என அறியப்படுகின்றது. ✷

### பொதுநலவாய எடின்பரோ ...

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களினது மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த ஸ்கொட்லாந்து தேசத்து எடின்பரோ நகரில் தமிழீழ – ஸ்கொட்லாந்து தேசக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன. அங்கே குழுமி நின்ற ஆயிரத்துக்கும் அதிகமான தமிழீழ மக்களும், ஸ்கொட்லாந்து மக்களும் தேசக் கொடிகள் ஏற்றி வைக்கப் படுகையில் அமைதியாக தேச வணக்கம் செய்தனர். ஸ்கொட்லாந்து தேசக் கொடி, ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. டென்னிஸ் கனவன் அவர்களாலும், தமிழீழத் தேசக்கொடி தமிழீழத்தின் மூத்த பத்திரிகையாளரும் 'கொட்ஸ்பிரிங்' ஆசிரியருமான திரு. சிவநாயகம் அவர்களாலும் ஏற்றிவைக்கப்பட்டன. இவ்வேளையில், கூடியிருந்த மக்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த தமிழீழத் தேசியக்கொடி பொறிக்கப்பட்ட பலூன்களை ஆகாயத்தில் பறக்கவிட்டு, கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தமை மெய்சிலிர்க்க வைத்தது. இது தொடர்பான முழுவிபரமும் கடைசிப் பக்கத்தில் உள்ளது.✷

## வவுனியா வீதிகளில் வீசப்பட்ட.....

### தலை துண்டிக்கப்பட்ட சடலம்

வவுனியா மாவட்டம் மாறம்பைக்குளம் பகுதியில் சிங்களப்படையினரால் இனக்கொலை செய்யப்பட்டு தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட சடலம், மாறம்பைக்குளத்தைச் சேர்ந்த 36 வயதான சின்னையா செல்வராசாவினுடையது என இனம் காணப்பட்டுள்ளது. 23 ம் திகதி காட்டிற்குச் சென்றபோது இவரைக் கைது செய்த சிறிலங்காப் படையினர், 25ம் திகதி அவரது தலையற்ற சடலத்தை வீசியுள்ளனர். இதேவேளை 4000 குடும்பங்களைச் சேர்ந்த 12000 தமிழர்கள் 14 சிங்கள முகாம்களில் செப்டம்பர் 96 முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரு குடும்பத்திற்கு 10 சதுரஅடி மட்டுமே வாழ்வதற்கு உள்ள நிலையில் துன்பப்படும் தமிழ் மக்களை அடிக்கடி சிறிலங்காப் படையினர் சோதனையிட்டு மேலும் துன்புறுத்தி வருகின்றனர்.

### மார்பவங்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தாய்மாரின் சடலங்கள்

இதற்கிடையில் நாகர்கோவில் வடமராட்சி கிழக்கில் இரு தமிழ்த் தாய்மாரின் சடலங்கள் மார்பகங்கள் துண்டிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் கரையொதுங்கியுள்ளன.

### 60 வயது முதியவர் கொலை இருவரைக் காணவில்லை

கிளிநொச்சி கோவில்குளத்தில் தனது வீட்டைப்பார்க்கச் சென்ற 60 வயது முதியவர் நாகமுத்து சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறு, உருத்திரபுரம் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற செல்வம், குஞ்சுராசா எனும் தமிழர்களும் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இப்பகுதியில் இவ்வாறு கடத்திச் சென்றும், சுட்டும் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 90 ற்கும் மேல் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### சுன்னாகத்தில் இளைஞர் கொலை

மனோகரன் சயந்தன் எனும் இளைஞர் சுன்னாகத்தில் வேலைமுடிந்து வீடு திரும்புகையில் செப்டம்பர் 26 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் கண்துடைப்பு விசாரணைகள் அம்பாறையில் நட்டாடும் மறுப்பு

சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளின் வளாகத்துள் முகாமிட்டு இயங்கும் "மனித உரிமை செயற்பாட்டுக்குழு" நீண்ட காலத்தில் பின் காணமற்போன 750 பேரில் பத்துப் பேரின் நிலையைக் கண்டுபிடித்து விபரம் தெரிவித்துள்ளது. மனித உரிமைச் செயற்பாட்டுக்குழு, சிறிலங்காவின் மனித உரிமை வன்முறைகள் விசாரிக்க வேண்டுமென உள்நாட்டில் காணமற்போனோர் பாதுகாவலர் அமைப்பு, அன்னையர் முன்னணி, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள் ஆகியன கொடுத்த அழுத்தங்களினாலேயே கண் துடைப்புக்காக அமைக்கப்பட்டது. இம்மனித உரிமைக்குழு உருவாக்கப்பட்ட பின்னரும் யாழ் குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் குறையவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அம்பாறை சென்றல் முகாம் பகுதியில் தமிழ் மக்களின் பல வீடுகள் சிறிலங்காப் படையினரால் எரிக்கப்பட்டமை தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களது நட்டஈட்டுக் கோரிக்கையை ஏற்கக்கூடாதென புத்தபிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார். நட்டஈடு செலுத்துவதற்காகவே தமிழர்கள் வீடுகளை எரித்தார்கள் என அப்பட்டமான பொய்யினைக் கூறிய இப்புத்தபிக்குவே, இந்த வீடுகள் எரிப்புகளுக்கும் இனப்படுகொலைகளுக்கும் ஆன சூத்திரதாரி எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

### தேசியம்: வரலாற்றின் ......

வளர்ச்சி என்பது அகவளர்ச்சி, புறவளர்ச்சி தன்னியல்பாகவும் ஏற்படலாம். அல்லது உணர்வுபூர்வமாகவும் ஏற்படுத்தப்படலாம். தன்னியல்பான வளர்ச்சி போதாதவிடத்தோ அல்லது இல்லாதவிடத்தோ உணர்வுபூர்வமான வளர்ச்சி அத்தியாவசியமாகின்றது.

ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய வளர்ச்சி இன்னொரு தேசிய வெறியாலோ, அல்லது தேசிய மேலாதிக்கத்தாலோ அல்லது தேசிய ஆக்கிரமிப்பாலோ தடை செய்யப்படுமிடத்து பாதிக்கப்படும் தேசியம், அத்தடையை அகற்றுவதற்காக நடாத்தும் போராட்டம், "அந்நிய எதிர்ப்புத் தேசியப் போராட்டம்" எனப்படும். அதே வேளை, குறித்த தேசியத்துக்குள் தேசிய வாழ்வுக்குத் தடையாக இருக்கும் காரணிகளுக்கு எதிராகப் போராடுவது முதல் நிலையில், "தேசிய சீர்திருத்தம்" எனப்படும். அது உச்ச நிலையில், தேசியப் புரட்சி எனப்படும்.

சிலவேளைகளில் தேசிய விடுதலையும் தேசியப் புரட்சியும் ஒன்று சேர வேண்டியும் இருக்கும். உலகில் ஒரு பகுதியினர் அரசியல் பொருளாதார ரீதியிலும், தொழில்நுட்ப ரீதியிலும் தேசிய எல்லைகளைத் தாண்டி "சர்வதேசியத்தில்" குதித்துள்ளனர். ஆனால், மறு பகுதியினரில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மக்கள் தமக்குரிய குறைந்த பட்சத் தேசிய வாழ்வைக் கூட ஈட்ட முடியாமல் தவிக்கின்றனர். ✷

www.tamilarangam.net



# இன அழிப்பு

சமாதான தேவதை சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்தால் யாழ் குடாநாட்டில் இருபதினாயிரம் தமிழ் குழந்தைகள் தாய் தந்தையரை இழந்துள்ளதாக யாழ். செயலக சமூக சேவைப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி, சந்திரிகா அரசால் ஒரு தலைமுறையே தமிழராகப் பிறந்த ஒரே காரணத்திற்காகத் தண்டிக்கப்பட்ட கொடுமையினை உலகுக்கு உணர்த்துகிறது.

அதேவேளை, சந்திரிகா அரசு சமாதானத்திற்கான யுத்தம் என்ற பேரில் ஒரு தேசத்தின் உட்கட்டுமானங்களை மூலவளங்களை தொழில்முயற்சிகளை முதலீடுகளை மட்டுமல்ல, அத்தேசத்தின் அப்பாவிக் குடிமக்களையும் பகிரங்கமாக இன அழிப்பு செய்வதனை தினம் தினம் வெளியாகும் புள்ளி விபரங்களும் செய்திகளும் உறுதிப்படுத்திக்கொண்டே இருக்கின்றன.

இன அழிப்பு என்ற சொற்றொடரை உருவாக்கிய நீதிபதி இறப்பேல் இலெம்கின் பின்வருமாறு கூறுகிறார்: "பொதுவாகக் கூறுவதானால், இன அழிப்பு என்பது ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களை பெருமளவில் கொன்று குவிப்பதை மட்டும் குறிக்காது. அந்த இனத்தின் தேசிய உறுப்பினர்களின் வாழ்வுக்குத் தேவையான அடிப்படையானவற்றை அழித்தொழிப்பதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதும் அத்திட்டத்தின் மூலம் அந்த இனத்திலுள்ள அரசியல், சமூக அமைப்புகளிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதும் கலாச்சார, மொழி, மத, பொருளாதார சீர்குலைவுகளை ஏற்படுத்தி அவர்களது தேசிய உணர்வை சீரழிய வைப்பதும் இன அழிப்பே ஆகும். இதற்காக அந்த இனத்தைச் சேர்ந்தவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, சுதந்திரம், உடல்நலம், சுயமரியாதை என்பவற்றை அழித்தொழித்து அல்லது அழித்தொழிக்க முற்படுவதும் அவர்கள் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அவர்களது உயிர்களைக்கூடப் பறிப்பதும் இன அழிப்பாகும்" என்கிறார். இலெம்கினின் இன அழிப்பு என்பதற்கு நடைமுறை உதாரணம் ஒன்று தேவையானால், அது இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு சந்திரிகா அரசு செய்துகொண்டிருக்கிற அத்தனை செயல்களையும் சுட்டிக்காட்டலாம்.

தமிழின அழிப்பு குறித்து ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமொன்று பல்வேறு செயல்முறைகள் ஊடாக இலங்கைத்தீவில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனை எதிர்த்து தமது உயிர்வாழ்தலுக்கும் இருக்கைக்குமான வாழ்வுப் போராட்டம் ஒன்றைத் தமிழர்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதனை உலகுக்கு மேலும் மேலும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு புலம்பெயர்வாழ் தமிழர்களையே சாரும். இதில் புலம்பெயர் தமிழர்கள் ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை, சந்திரிகா அரசு சமீப காலமாக புலம்பெயர் தமிழர்கள் மேல் காட்டிவரும் அதீத அக்கறையும் புலம்பெயர் தமிழர்களின் சுதந்திர இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துவரும் பகீரதப் பிரயத்தன முயற்சிகளும் தெளிவுபடுத்துகின்றன.

இந்நேரத்தில், புலம்பெயர் தமிழர்கள் தம் தேச மக்களுக்கு தமது தாயகத்தின் நிகழ்வுகளை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டுகிறார்கள் என்பதை, அக்டோபர் 25ம் திகதிய தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு தேச யாத்திரை மீண்டும் உறுதி செய்துள்ளது. இதனால், சந்திரிகா அரசு வெளிநாடுகளுக்குச் செய்ய முயன்ற உண்மைக்கு மாறான பரப்புரைகளின் போலித்தன்மை வெளிப்பட்டுள்ளது.

இந்த ஆர்வம், தேச பக்தி மேலும் மேலும் வளர்வதற்கு புலம்பெயர் தமிழீழ மக்களிடையே நெருக்கமான உறவுகளும், செய்திப் பரிமாற்றங்களும் வேகப்படுத்தப்பட வேண்டும். இதற்கு ஒரே வழி, சர்வதேச நாடுகளிலும் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகங்களுடனும் அவைகளது செயற்திட்டங்களுடனும் தமிழீழ புலம்பெயர் மக்கள் முன்னைவிட மேலும் இறுக்கமாகவும் நெருக்கமாகவும் தம்மை இணைத்துக்கொள்வதே ஆகும். எங்கள் குழந்தைகள் 20,000 பேர் யாழ். குடாநாட்டு யுத்தத்தால் மட்டும் தாய் தந்தையர் அற்றவராகி உள்ள பரிதாப நிலைக்கு முடிவு கட்டும் செயற்திட்டங்களுக்கு ஒவ்வொரு தமிழீழ புலம்பெயர் தமிழனும் தன்னால் இயன்ற அனைத்துப் பங்களிப்பையும் செய்ய வேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரமிது. தென் தமிழீழத்திலும் யாழ். குடாநாட்டிலும் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலும் சிறிலங்காவின் இன அழிப்பால் துன்புறும் எமது மக்களுக்கு உதவக்கூடிய அனைத்து முயற்சிகளிலும் எமது நேரம்– பொருள்– வேலை– சிக்கல்களுக்கிடையில் நாம் பங்களிப்பு செய்தே ஆகவேண்டும். அதுவே இன அழிப்பை முறியடிக்க ஒரே வழியாகும்.

# புதிய அரசியல்யாப்பு போரை நிறுத்துமா?

சந்திரிகா அரசு அதிகாரப் பரவலாக்கலை முன்வைத்த பின்னரும் போர் நடைபெறமாட்டாது என்பதற்கு அரசினால் உத்தரவாதம் அளிக்க முடியுமா என்ற பௌத்த மகாசங்கத்தின் கேள்வியானது களநிலையைப் பொறுத்து ஒரு பொருத்தமான கேள்வியேயாகும். இக் கேள்வியை பௌத்த மகாசங்கம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் கேட்டதாயினும் அரசினால் இதற்கு நடைமுறையில் சாதகமாகப் பதிலளிப்பது கடினமானதாகும். அத்தோடு மகாசங்கம் தனது கேள்விக்கு ஆதாரமாக சரியானதொரு எடுத்துகாட்டையும் சுட்டிக்காட்டியுள்ளது. சந்திரிகா முன்வைத்துள்ள யோசனைகளின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனிமைப்படுத்தப்பட்டுவிடுவார் எனக் கூறுகின்றார்கள் – இப்போது மட்டும் என்ன, அவர் தனியாகத் தானே இருக்கின்றார் – போரைத் தொடர்ந்து நடாத்திக் கொண்டு தானே இருக்கின்றார் எனவும் தெரிவித்துள்ளது.

மகாசங்கத்தினரின் இக் கூற்றுக்கள் இன்றைய களநிலையைப் பொறுத்து முற்றிலும் சரியானதே. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று தனித்து நின்றே சிறிலங்கா அரசுக்கு எதிராகப் போராடுகின்றது. இந்நிலையில், புலிகள் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார்கள். இதனால், போராட்டம் பலவீனப்பட்டுவிடும் எனக்கூறுவது தவறானதே ஆகும். ஆகையினால் அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் போரை நிறுத்திவிடப் போவதில்லை என்பது வெளிப்படையான ஒன்றேயாகும். அதாவது, அரசு கைகொள்ளும் வழிமுறையானது, புலிகளைப் பலவீனப்படுத்தவோ அன்றி அவர்களின் ஆற்றலைக் குறைக்கவோ உதவப் போவதில்லை. மாறாக, நீண்டகாலப் போர் ஒன்றிற்கு வழிவகுக்கக் கூடியதாகும். ஏனெனில், சிறிலங்கா அரசுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விடுதலைப் போரை நடாத்திக் கொண்டு இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரேயாகும். ஆகையினால், போருக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் அது விடுதலைப் புலிகளுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இதைத் தவிர்த்து, அவர்களைத் தொடர்ந்து போரை நடாத்த நிர்ப்பந்தித்துவிட்டு, போருடன் சம்பந்தப்படாதவருடன் போரைக் குறித்துப் பேசுவதிலோ அன்றி தீர்வு காண முற்படுவதிலோ அர்த்தம் எதுவும் இல்லை.

அடுத்ததாக, பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டாலும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நியாயபூர்வமான தீர்வொன்றைக் காண அரசு முன்வரவேண்டும். அவ்வாறு காணப்படின் போராட்டத்துக்கான காரணமானது முற்றுப்பெற்று போராட்டத்தின் தீவிரம் குறைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், இவை இரண்டையும் தவிர்த்து தாம் விரும்பிய ஓர் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை தமது விருப்பிற்கு ஏற்றவர்களுடன் சமரசம் செய்து கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணமுடியும்? இதனால் போர் முற்றுப் பெறுவதற்கு வாய்ப்பு எவ்வாறு ஏற்படும்? ஆனால் அரசிற்கும் இது தெரியாததல்ல. இதன் காரணமாகவே அரசியல் தீர்வு முன்அதிகாரம் வகிக்கும் என்று கூறிக்கொண்டாலும் போரைத் தொடர்ந்து நடத்துவதிலேயே அரசு முனைப்பாக உள்ளது.

ஆனால், அரசின் இம் முயற்சியும் வெற்றி அளிக்கப் போவதில்லை. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு போரினால் தீர்வு காணமுடியாது என்பது மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் போன்ற ஆற்றலும், திறமையும் மிக்க ஒரு போராட்ட அமைப்பினை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ளுவது என்பது சாத்தியமானதொன்றல்ல.

இந்தவகையில், மகாசங்கத்தினர் விரும்பும் இராணுவத்தீர்வோ அன்றி அரசதரப்பினர் கைக்கொள்ளும் இருவழி அணுகுமுறையுமோ ஒரு வழி இராணுவத்தீர்வு, மறுவழி தன் விருப்பிற்கு ஏற்ற அதிகாரப் பரவலாக்கலிற்கோ இனப் பிரச்சினைக்கு தீர்வையோ அன்றி போரிற்கு முடிவையோ கொண்டுவரமாட்டாது. போரிற்கு தீர்வானது தமிழர்களின் அரசியல் உரிமைகளை நிலைநிறுத்தும் ஒரு அதிகாரப் பரவலாக்கலுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வழிநடாத்தும் விடுதலைப் புலிகளுடனே மேற்கொள்ளப்பட வேண்டும். ✷

# ஒத்துழைப்பு ஏன்?

புதிய அரசியல் யாப்புத் திட்டம் குறித்தும் அதில் இடம்பெறும் அதிகாரப் பரவலாக்கல் விவகாரம் குறித்தும் எதுவித இறுதித் தீர்மானங்களும் எடுக்க முடியாதுள்ள இந்நிலையில், முடிவடைந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி இத் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. அதாவது, ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் கட்சிகள் தவிர்த்து வெளியில் இருந்து ஆதரவு வழங்கிய ஒரு கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உள்ளனர். ஆனால் இப் புதிய அரசியல் யாப்புக்கு கூட்டணியினர் ஆதரவு அளிக்கு முன்னரே இதன் எதிர்காலம் குறித்து அரசியல் வட்டாரங்களில் பொதுவாகவே உணரப்பட்டு இருந்தது. அதாவது, இது சட்டமூலம் ஆவதற்கோ அன்றி அமுலாக்குவதற்கோ எந்தவித வாய்ப்பையும் கொண்டிருக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க புதிய அரசியல் யாப்போ அதிகாரப் பரவலாக்கமோ இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவரப் போவதில்லை என்பது மறுபுறமாகவும் உணரப்பட்டு இருந்தது.

அதாவது, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, தொகுத்துள்ள புதிய அரசியல் யாப்புத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் ஆதரவு அளிக்கமாட்டாது என்பது ஏற்கெனவே தெரிந்த விடயமாகும். அத்தோடு, அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திற்கு பௌத்த அமைப்புக்கள் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்பதும் வெளிப்படையான ஒன்று. இவை ஒருபுறம் இருக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன்வைத்துள்ள புதிய அரசியல் யாப்பு குறித்தோ அதில் இடம்பெறவுள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்தோ பொ.ஐ.மு.க்கு முழுமையாக இன்னும் தெரியாது என்று கூறப்பட்டு வருகின்றது. இதில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அமைச்சர் பேராசிரியர் பீரிசுக்குமே வெளிச்சம் என ஆளும் கட்சியினரே கூறிக் கொள்கின்றனர்.

இதைத்தவிர, அதிகாரப் பரவலாக்கல் திட்டமானது இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது என்று கூறினும், தமிழர் தாயகத்தினை பல கூறாகத் துண்டு போடுகின்றது என்பது வெளிப்படையான ஒன்றாகும். இதில் ஆளும் கட்சியிலேயே எந்தவித முரண்பாடு இல்லை. இவ்விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள் கூட அரசோடு முரண்பாடு கொண்டவையாக உள்ளன. இது பாராளுமன்றத்தின் தெரிவிக் குழுவிலேயே தெளிவானது.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டும் இவ் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திற்கும் புதிய அரசியல் யாப்புக்கும் ஆதரவு வழங்குவது ஏன்? அவ்வாறு அரசியல் யாப்பு திட்டத்தில் அவர்கள் கண்டுகொள்வது என்ன? அதாவது தமிழ் மக்கள் எவருக்குமே தெரியாத முற்போக்கான அம்சம் என்ன அந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் உள்ளது?

இல்லாதுவிடில், இனப்பிரச்சினைக்கு சிங்களப் பேரினவாத சக்திகள் ஏதாவது பிச்சை போட்டால் ஒழிய வேறு மார்க்கம் இல்லை என்ற நீண்டகாலச் சித்தாந்தமா? அன்றி கொழும்பில் இருந்து வெளியாகும் தகவல்களின்படி இவ் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் பின்னணியில் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களான் நீலன் திருச்செல்வம் போன்றோர் இருப்பது காரணமா? இதுவும் இல்லாதுவிடின் வெளியாரைத் திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையா? இதில் எதுவாக இருப்பினும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழர் தாயகத்தை சிதைத்துவிடவும் இனப்படுகொலையிலும் ஈடுபடும் சந்திரிகா அரசினை பாதுகாக்கும் முயற்சியில் முற்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையானதாகும்.

இதற்கு பிரதி உபகாரமாக, ஒரு மாகாணத்தின் தலைமைப் பதவியையோ அன்றி உள்நாட்டு – வெளிநாட்டு எசமானர்களின் உதவிகளையோ அவர்கள் சம்பாதிக்க முடியும் என்று எண்ணலாம். ஆனால் ஒன்றை மட்டும் கூட்டணியினர் புரிந்து கொள்ள மறந்துவிட்டனர். அதாவது, தமது நடவடிக்கைகள் மூலம் தமது எசமானர்களைத் திருப்திப்படுத்தவும், சில அனுகூலங்களை அவர்களால் பெற முடியுமே ஒழிய, தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவோ அன்றி அவர்களை ஆட்சி செய்யவோ ஒருபோதும் கூட்டணியினாலோ

அல்லது அதன் எசமானர்களாகவோ முடியாது என்பதே அதுவாகும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு கல்லில் இருமாங்காய் பிடுங்கப்போன சந்திரிகா

சந்திரிகா அரசின் சமாதான நாடகமும், ஆக்கிரமிப்புப் போரும் ஒரே ஒரு நோக்கையே கொண்டுள்ளது. தமிழர் தேசியத்தை உடைத்து தமிழர் தாயகத்தை அழிப்பது என்பதே அவ் நோக்கு. இதுதான் சந்திரிகா அரசின் வேலைத் திட்டம் என்பதை தெட்டத் தெளிவாக விளங்கிக் கொண்ட தமிழீழ மக்களின் தலைமை அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள், சந்திரிகா அரசின் செயற்திட்டத்தை முறியடிக்கும் அனைத்து முயற்சிகளிலும் இறங்கினர். இதனால் தன் நோக்கு சிதறடிக்கப்படுவதை உணர்ந்த சந்திரிகா சமார்த்தியமான முறையில், வாக்குகளைப் பெற மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை கைவிட்டு, 'சமாதானம்' என்ற சொல்லில் சிறுதிருத்தம் ஒன்றைச் செய்து 'சமாதானத்துக்கான போர்' என்ற ஆரவாரத்துடன் ஆக்கிரமிப்பு போரைத் தொடங்கினார். ஆமினும், இந்தப் போர், விடுதலைப் புலிகளின் மதிநுட்பமான போர்த் தந்திர மாற்றங்களாலும், வலிமைமிகு இராணுவத் தாக்குதல்களினாலும் குறித்த இலக்கை எய்யாதவாறு தடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை, சந்திரிகாவின் போர்ப் பிரகடனம், விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் என்றுமில்லாத வகையில் தமதாக்கிக் கொள்வதற்கான பல சந்தர்ப்பங்களை வாரிவழங்கியது. இதனால் விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை பல மடங்காக பெருக வைத்த எதிர்விளைவை சந்திரிகா அரசின் போர் அவருக்குத் தேடிக் கொடுத்துள்ளன.

முல்லைத்தீவு முதல் இன்றுவரையான வன்னிச் சமர்கள் வரை சந்திரிகாவின் படையினர் பலத்த இராணுவ ஆளணி இழப்பையும் ஆயுத இழப்பையும் சந்தித்துள்ளனர். இதனால் சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவீனம் பல மடங்காக உயர பொருளாதார ரீதியாக ஈடுசெய்யமுடியாத சிக்கலுக்குள் சிக்கி வருகிறது சிறிலங்கா அரசு.

## அக்கல்லுக்கு தன்தலைதப்ப தவியாய்த் தவிக்கிறார்

இந்த யதார்த்தங்களின் தரிசனம் தந்த அனுபவங்களால் சந்திரிகா மீளவும் தனது தந்திரோபாயத்தில் புதிய உத்தியொன்றை உருவாக்கியுள்ளார். அதுதான் 'ஒரு தேசம் ஒரு மக்கள்' என்ற புதிய வேதம்.

இந்த புதிய வேதாந்தம் ஒன்றும் புதிய படைப்பு அல்ல. சிங்கள பௌத்த பேரினவாதத்தில் ஏற்படுத்திய ஒரு நவீனத்துவம் என்பதே உண்மை. பழைய சிங்கள பௌத்த பேரினவாதிகள் இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள பௌத்தர்களது தேசம் என்ற வேதாந்தத்தை கடைப் பிடிக்கின்றனர். ஆனால், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் தமிழர் தாயகத்தின் வரலாற்று இருக்கையையும் அதனை மீட்பதற்கான காலத் தேவையையும் உலகுக்கு உணர்த்தியதால் பழைய சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிரான தமிழர்களின் நியாயமான போராட்டம் உலகால் ஏற்கப்படத் தொடங்கியது. இந்நிலையிலேயே, சந்திரிகா, "சமாதானம் என் நோக்கு", "பேச்சுவார்த்தை என்வழி" என்றெல்லாம் வசனங்கள் பேசி உலகின் கண்களில், சிங்கள அரசிற்கும் நியாயமான தீர்வில் அக்கறை இருப்பதுபோல் காட்டி, உலகு, தமிழீழத் தேசிய விடுதலை ஈட்டப்படுவதில் காட்டிய அக்கறையை திசை திருப்பினார். பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தன் தீர்வுத்திட்டத்துக்கான ஒரே தடை - அதை உடைக்கப் பணம் தாருங்கள் - படைக்கருவிகள் தாருங்கள் என்று உலகநாடுகளை நாடி ஓடிய சந்திரிகா, படைபலம் கொண்டு தமிழ் மக்களை அடக்கித் தன் தீர்வை திணிக்கும் பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கினார்.

ஆமினும், படைபலம் என்பது இலட்சிய உறுதியின் முன்னால் துவண்டுவிடும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த சந்திரிகா, இலட்சியத்தில் ஓட்டை செய்யும் அம்பாக, 'தீர்வுத் திட்ட பொதியை' பௌத்த சிங்கள பேரினவாத நாணில் பூட்ட முனைந்தார். ஆனால், பௌத்த - சிங்களப் பேரினவாத பழமைவாதிகளுக்கு இந்தச் சிறுதிருத்தமான "ஒருதேசம் ஒரு மக்கள்" என்பது கூட ஆத்திரமூட்டும் செயலாக அமைந்ததை இத் தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது நடைபெற்ற அமளிதுமளிகள் உறுதிப்படுத்தின.

சந்திரிகா பழைய திராட்சை இரசத்தை புதிய சித்தையில் வார்க்க முனைகிறார். ஆனால் புதிய திராட்சை இரசத்தை தான் புதிய சித்தைகளில் வார்க்க வேண்டும். பழையதை வார்த்தால் அது சித்தையை வெடிப்பித்துவிடும் என்ற உண்மையை சிறிலங்காப் பாராளுமன்றத்தில் உணர்ந்துள்ளார். இதனால் தனது திட்டத்தால் ஒரு கல்லில் இரு மாங்காய் விழுத்தப் போன சந்திரிகா அதாவது, தமிழ்த் தேசியத்தையும் தமிழர் தாயகக் கோட்பாட்டையும் ஒரே செயற்திட்டத்தால் இல்லாதழித்து விடலாமெனத் துடிக்கும் சந்திரிகா - தனது நரித்தந்திரத்தை புரிந்து கொள்ளாத பழைய சிங்கள- பௌத்த பேரினவாதிகள், தன் தலையிலேயே கல்லைப் போட்டு தன் தகப்பனுக்கு அளித்த அதேபரிசை அளித்து விடுவார்களோ என கலங்கிக் கொண்டு இருக்கிறார்.

ஆயினும், சந்திரிகா நரித்தனத்தில் விற்பன்னர். சிங்களத் தேசம் முழுவதும் "ஒரு தேசம் ஒரு மக்கள்" என்ற குரலை பரப்பி இது ஒலித்தாலே போர் நிற்கும் என ஆசை வார்த்தை காட்டி மக்களை மயக்கித் தன் தீர்வுப் பொதியை ஏற்க வைக்கும் கடும் முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

இதனால், இந்நேரத்தில் தமிழ் மக்களிடையில், இத் தீர்வுப் பொதி தமிழ்த் தேசியத்துக்கும் - தமிழர் தாயகத்திற்கும் வைக்கப்பட்ட குறி என்பதை எடுத்து விளக்கி அவர்கள் சந்திரிகாவின் மயக்குமொழியில் மதியிழந்துவிடாது எச்சரிக்கை செய்யப்பட வேண்டிய பொறுப்பு எல்லாத் தமிழ் மக்களதும் கடமையாக உள்ளது. ✷

(சூ.பற்றிமாகரன்)

# சிறிலங்கா தமிழர்களுக்குச் சட்டவிரோத அரசு.....

### யாழ். குடாநாட்டில்.....

யாழ். குடாநாட்டில் குருநகர் - பாசையூர் - கொழும்புத்துறை கரையோரக் கிராமங்களை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல தமிழ் பொதுமக்களை இராணுவ முகாம்களுக்கு கொண்டு சென்று சித்திரவதைப்படுத்தி வருகின்றனர். அத்துடன் வீட்டில் குடியிருப்பவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் வீட்டுவாயிலில் தொங்கவிடப்பட வேண்டும் எனப் பணித்துள்ளனர். இதே போன்ற புங்குடுதீவிலும் வீடுகளில் குடியிருப்பவர்களின் பெயர் விபரப்பட்டியல் வாசலில் தொங்கவிடப்படல் வேண்டுமென கடும் உத்தரவினை இராணுவத்தினர் பிறப்பித்துள்ளனர். வன்னிப் பகுதியிலும் சிறிலங்கா இராணுவம் தமது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் நடாத்திய கைதுகளில் பலர் இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை மக்களை மேலும் கைதாக்கி சித்திரவதை செய்வதற்கு வசதியாக அவர்களை எச்சரிக்கும் அறிக்கை ஒன்றை சிறிலங்கா இராணுவத்தின் 51வது பிரிவு யாழ். குடாநாட்டில் விடுத்துள்ளது. அதன்படி விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்து அல்லது வேறு உதவிகள் செய்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், யாழ் மாவட்டத்தில் மீனவர்களிடம் இருந்து அவர்கள் பிடிக்கும் மீன்களில் ஒருபகுதியை தமக்கு கப்பமாக இராணுவத்தினர் பறித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல் வன்னிக்கு அரிசி மூட்டைகளை ஏற்றிச் சென்ற ஐந்து லொறிகள் சிங்களப் படைமினரால் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றிலிருந்த அரிசிமூட்டைகள் காவலரண் மூட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. ஐப்பசி 5ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மேலும் சிறிலங்கா இராணுவத்தினர் தாம் கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டு சென்ற 52 தமிழ் இளைஞர்கள் பெண்கள் மேல் எதுவித குற்றமும் காணாதநிலையிலும் அவர்களை விடுதலை செய்ய மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

### பெருந்தொகையானவர்கள் கண்ணிவெடிக்கு பலி

யாழ். குடாநாட்டில் சிங்கள இராணுவத்தினர் பொதுமக்களின் நடமாட்ட பிரதேசங்கள், சுற்றியுள்ள யாழ். பல்கலைக் கழகம் மற்றும் பாடசாலை மைதானங்களிலும் கண்ணி வெடிகளை புதைத்து வைத்து அகற்ற மறுப்பதினால் பொது மக்கள் தினமும் கண்ணி வெடியில் தமது அங்கங்களை இழந்து வருகின்றனர். வசாவிளான் பகுதியில் 61 வயதான சித்தர் குழந்தைவேல், சாவகச்சேரியில் 27 வயதான லட்சுமி வேதரூபன் ஆகியோர் கண்ணிவெடியில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளனர். மேலும், ஒரேநாளில் மூன்று பொதுமக்கள் தமது கால்களை இழந்த சோகசம்பவம் கடந்த மாதம் 10ஆம் திகதி இடம்பெற்றது. 26 வயது தம்பிரட்ணம் சசிரேகா என்ற இளம்பெண் கோண்டாவில் இராணுவ முகாமைக் கடந்து செல்கையில் கண்ணிவெடியில் சிக்கித் தனது வலது காலை இழந்துள்ளார். அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா நரசிம்மன் ஆலயத்திற்குச் செல்கையில் இராணுவக் கண்ணிவெடியில் சிக்கிக் காலை இழந்தார். இதேநாளில் புத்தூரில் வீட்டு வளவைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்த செல்வன் அருளானந்தராசா கண்ணி வெடியில் சிக்கி காலை இழந்தார். மேலும், புத்தூரில் பிறிதொரு நாளில் 36 வயதான ராமநாதன் சந்திரசேகரன் தனது வலது காலை இழந்துள்ளார். யாழ். குடாநாட்டில் உள்ள பல பொதுஅமைப்புக்களும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மதகுருமார் ஆகியோரும் இக் கண்ணிவெடிகளை அகற்றுமாறு சிறிலங்கா அரசை வற்புறுத்தி கேட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

### தென் தமிழீழத்தில்

மட்டக்களப்பு மாவட்டம் புளியந்தீவில் சிங்களப் படை பாரிய எடுப்பிலான சுற்றிவளைப்பு தேடுதல் நடாத்தி காலை முதல் மாலை வரை பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்ததும் அல்லாமல் பலரைக் கைது செய்து கொண்டும் சென்றுள்ளது. வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன. இதே வேளை, கிரான் பகுதியில் 18 வயதுடைய பி. சந்திரகுமார் எனும் கிரான் மகாவித்தியாலய மாணவன் வீட்டுக்குச் செல்கையில் சிறிலங்காப் படையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

### மலையகத்தில்....

மலையகம் வாழ் தமிழரும் சிறிலங்காப் படைகளின் கைதுகளுக்கு ஆளாகியுள்ளனர். மலையகத்தில் தமது உறுப்பினர் வீட்டில் தங்கியிருந்த மூன்று இளம்பெண்கள் சிங்கள படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### உயிர் தப்பிச் செல்லவும் அனுமதியில்லை

சந்திரிகாவின் கடற்படை, தலைமன்னாரில் இருந்து முப்பத்தைந்து தமிழ் மக்கள் ஒரு படகில் ஏறி இந்தியாவுக்கு உயிர்காக்க தப்பிச் செல்லுகையில் அவர்களை இடைமறித்து கைது செய்து கொண்டு சென்றுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா அரசு, தமிழீழத்திற்கு உள்ளும் வெளியும் தமிழ் மக்களை இராணுவ ஒடுக்குமுறைகளூடாக அடிபணிய வைத்து அவர்களின் அரசியல் பணிவைப் பெறுவதற்கு தன்னாலான சட்டவிரோத செயற்பாடுகள் அனைத்தையும் செய்து வருகிறது. இவை எல்லாம் சிறிலங்கா தமிழ் மக்களது அந்நிய அரசு என்பதைத் தெளிவுபடுத்தி வருவதால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்பான அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. ✷

www.tamilarangam.net



# பாரிய இடம்பெயர்வின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி

மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் 58 ஆவது ஆணைக்குழுவின் முன்பாக, 1994 ம் ஆண்டில் உள்நாட்டில் அகதிகள் ஆக்கப்பட்டோர் என்ற தலைப்பில் இலங்கை குறித்து திரு பிரான்சிஸ் டொல் பின்வருமாறு கூறினார்: "நாட்டின் நிலமை இன்னும் மோசமான சீர்கேடாக வுள்ளது. 50,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மேலும் இன அழிப்பு நடவடிக்கையில் உற்சாகத்துடன் ஈடுபடத் தொடங்கியது. 1995 ஆடி 7 இல் தொடங்கப்பட்ட 5 தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் யாழ் குடாநாட்டில் தம் இல்லங்களிலிருந்தும் வாழ்வு முறைகளிலிருந்தும் சுயவிருப்பின்றியே இடம்பெயர வைக்கப்பட்டனர். தம் அதாவது யாழ் குடாநாட்டின் உட்கட்டுமானங்களை சிதைத்து மக்களது எதிர் காலத்தையே இருளடையச் செய்யும் மனிதாயத்திற்கு எதிரான, அமைதிக்கெதிரான குற்றத்தை சிறிலங்கா நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. 450 வருட அந்நிய ஆட்சியில் கூடத் தங்கள் குடிமனைகளை விட்டு அகலாத தமிழ் மக்கள், ஒடுக்குமுறை அரசான சிங்கள அரசின் கொடுமைகளைத் தாங்கமுடியாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பெருநிலப்பரப்பு நோக்கி 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 இல் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், "மக்கள் விருப்பே" எல்லாவற்றிற்கும் அடிப்படை என வசனம் பேசும் நாகரீக உலகில் அதனைக்கூட சந்திரிகா அரசு அனுமதிக்கவில்லை. மக்கள் வன்னிப் பெருநிலப் பரப்பிற்குள் போவதற்கான ஒரே பாதையாக இருந்த கிளாலிக் கடலேரியில் பயணிகள் படகுகளைத் தாக்கி, பயணிகளைச் சுட்டுப் பொசுக்கி தமிழ் மக்களின் நடமாடும் சுதந்திரத்தை, விருப்பத்தேர்வு உரிமையை மறுத்தது. அத்துடன், வன்னிப் பெருநிலப் பரப்புக்கான உணவு, மருந்து மற்றும் தங்கும் வசதிகள் அனைத்தையும் அனுமதிக்க மறுத்த சிறிலங்கா, ஐ.நா. படைகளினால் தொடர்ந்தும் யுத்தக்குற்றச் செயல்களதும் பாலியல் வன்முறைகளதும் கருவிகளாக்கப் படுகின்றனர்.

இந்த இராணுவ அட்ட காசங்களின் நிலைகுறித்து ஐ.நா. வின் மனித உரிமைச் செயற்பாட்டாளராக கடமை யாற்றிய லியோ கூப்பர் கூறிய கருத்துக்கள் அலட்சியப் படுத்தப்பட்டதன் விளைவே இத்தகைய அரச பயங்கரவாத எதிரான குற்றங்கள், இன அழிப்புக்கள் நிகழ்ந்ததும் அதனைத்தட்டிக் கேட்கும் கடமைப்பாடுடைய ஐ.நா. சபையும் மௌனமாக இருக்கும்வரை, சந்திரிகாவின் தமிழர்களுக்கெதிரான சட்ட விரோத அரசு தனது ஆக்கிரமிப்பைத் தொடர்வதும் அதன்வழி தமிழ்மக்களின் உயிர் வாழ்வை அழிப்பதும் நாளாந்த காட்சியாகவே அமையப்போகின்றது.

எனவே, தமிழீழதேச மக்களின் பாரிய இடம் பெயர்வின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியாகும் இந்நேரத்தில், தமிழீழதேச மக்களுக்கு உலகின் மக்கள் என்ற வகையில் ஐ.நா.சபை செய்ய

உலகெங்கும் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்புக்கள் நிகழ்ந்ததும் அதனைத்தட்டிக் கேட்கும் கடமைப்பாடுடைய ஐ.நா. சபையும் மௌனமாக இருக்கும்வரை, சந்திரிகாவின் தமிழர்களுக்கெதிரான சட்டவிரோத அரசு தனது ஆக்கிரமிப்பைத் தொடர்வதும் அதன்வழி தமிழ்மக்களின் உயிர் வாழ்வை அழிப்பதும் நாளாந்த காட்சியாகவே அமையப்போகின்றது.

எனவே, தமிழீழதேச மக்களின் பாரிய இடம் பெயர்வின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியாகும் இந்நேரத்தில், தமிழீழதேச மக்களுக்கு உலகின் மக்கள் என்ற வகையில் ஐ.நா.சபை செய்யவேண்டிய கடமைகளை நினைவுறுத்தி தமிழர்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் அதனை முன்னெடுக்கும் தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கும் படி குரல் கொடுக்கவேண்டியது புலம் பெயர்ந்த தமிழர்களின் தேசியக் கடமையாகும்.

நீண்ட யுத்தத்தினால் பலகோடி சொத்துக்கள் வடக்கிலும் கிழக்கிலும் அழிக்கப பட்டுள்ளது. மனிதநேயமற்ற வெளியேற்றங்களும் அகதி வாழ்க்கையும் அதிகரித்து விட்டன. அது இன்னும் தொடர்கதையாகவே உள்ளது." (ஆதாரம் "என் மக்களை வாழ விடுங்கள்"- எஸ்.ஜே.இம்மானுவேல் 1997) சொந்தத் தேசத்திலேயே தமிழினம் ஆதர வற்றவர்களாக்கப்பட்ட கொடுமை



மௌனமாம். 1983 இன அழிப்புக்கலவரத்தின் போது சிறிலங்காவைக் கண்டிப்பதற்குப் பதிலாக மிக மெது மையான கண்டனத்தீர்மானம் ஒன்று 8 க்கு 10 (4 நாடுகள் சமூகமளிக்கவில்லை) நாடுகள் என்ற ரீதியில் உப ஆணைக் குழுவில் நிறை வேற்றப்

வேண்டிய கடமைகளை நினைவுறுத்தி தமிழர்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் அதனை முன்னெடுக்கும் தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கும்படி குரல் கொடுக்க வேண்டியது புலம்

## தமிழரின் அவலங்கள் குறித்த அறிக்கைகளும் ஐ.நா.சபையால் அலட்சியப்படுத்தப்பட்டன

ஆனால், இந்தக் கருத்து ஐக்கிய நாடுகள் சபையினரின்



கவனத்தைப் பெரிதும் கவரவில்லை. இதன் விளைவாக சிறிலங்கா அரசு சிறிலங்காவால் உருவாக்கப்பட்டது. அந்நிய ஆட்சியாளரான போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் கூட செய்ய நினைக்காத அந்தக் கொடிய எண்ணத்தை, செயலரின் அவசர உதவி அழைப்பையும் நிராகரித்து சர்வதேச உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்காதும் தடுத்தது. அதேவேளை, தனது இராணுவப் படையெடுப்பினை இடம்பெயர் மக்கள் மேல் ஏவிவிட்டு, தமிழர்களை நடைமுறைக் கைதிகளாக்கி யாழ் குடாநாட்டில் திறந்த வெளிக் கைதிகளாக குடியமரவும் செய்துள்ளது. மக்களின் எழுபதினாயிரம் குடிமனைகளை இடித்து, படையினர் பதுங்குவதற்கான பாதுகாப்பு அரண்களை அமைத்த ஒரே ஒரு அரசாங்கமாகவும் சிறிலங்கா அரசாங்கம் இயங்குகிறது. கிருசாந்தி கொலை முதல் இன்றுவரை தமிழ்ப்பள்ளி மாணவிகள், தமிழ் இளம் பெண்கள் சிறிலங்கா அரச பட்டதைச் சுட்டிக்காட்டும் லியோ கூப்பர், "இந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை உறுதியான தீர்மானம் எடுக்காது விட்டது துர்அதிஸ்டமானது. இதனாலேயே இன்று சிங்கள இராணுவம் தமிழர்களை இனஅழிப்பு செய்யும் யுத்தத்தை நடத்துகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். (Leo Kufer, The presention of Genoside 222,1985)

இந்த எச்சரிப்புக்களை இங்கு குறிப்பிடுவதன் காரணம், இன்றும் தமிழீழ மக்கள் பாரிய இடம்பெயர்வுக்கு ஆளாகி துன்பவாழ்வை எதிர்நோக்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் ஒரு காரணமாக வுள்ளது என்ற உண்மையைத் தெளிவு படுத்துதலேயாகும். உலகெங்கும் மனிதாயத்திற்கு

பெயர்ந்த தமிழர்களின் தேசியக் கடமையாகும். தமிழீழ விடுதலை புலிகளதும் தமிழீழ மக்களதும் சுயநிர்ணய உரிமை போராட்டத்தினது ஐ.நா அங்கீகாரம் ஒன்றே, பிரச்சனைகள் தீர்வதற்கான ஆரம்ப அத்திவாரமாக அமையும் என்பதை ஐ.நாவின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு நினைவு படுத்தும் பணியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈடுபடவேண்டும்.

அத்துடன், இடம்பெயர்ந்து துயருறும் மக்களின் நிவாரணபணிக்கும் இயன்ற வகையில் எல்லா உதவிகளையும் அளிக்க முன்வருதல் வேண்டும். ✸

சூ. பற்றிமாகரன்

www.tamilarangam.net



# தேசியம்: வரலாற்றின் தவிர்க்கப்படவியலாத ஒரு கட்டம்

-மு.திருநாவுக்கரசு

உலகில் ஒரு சாராரால் மிகவும் பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்றாய் "தேசியவாதம்" உள்ளது. "தேசியவாதம்" குறுகிய மனப்பாங்கு கொண்டதென்றும், அது பிற்போக்கானது என்றும், அது கைவிடப்பட வேண்டியதென்றும் இன்று கொழும்புவாழ் தமிழ், சிங்கள புத்திஜீவிகளில் சிலர் அடுக்கடுக்காய் கருத்துக்களை முன் வைக்கின்றனர். மேற்குலகிலும் இவ்வாறான கண்ணோட்டம் கொண்டோர் உளர்.

அண்மைக்காலத்தில் வெளியான இத்தகைய கருத்துக்களைக் கண்டு விசனமுற்ற சிலர், இது பற்றிய ஒரு கண்ணோட்டத்தைக் குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் முன்வைக்க வேண்டியது அவசியம் என்று கூறிக்கொண்டதன் விளைவே இக்கட்டுரையாகும். இதில் தனித்தனியாக பெயர்களைக் குறிப்பிட்டோ அல்லது அவரவர் கருத்துக்களைத் தனித்தனியாக எழுதியோ ஒரு பெரும் வாதப் பிரதிவாதம் புரிவதைவிடவும் கருத்துக்களைப் பொதுமைப்படுத்தி நேர்க்கணியமான ஒரு கண்ணோட்டத்தை மிகச் சுருக்கமாக முன்வைப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

மனிதன் என்றால் கூட்டுவாழ்வைக் கொண்டவன். கூட்டுவாழ்வின்றி எந்தவொரு மனிதனாலும் (தெய்வமே மனிதனாய்ப் பிறந்தாலும் கூட) ஓர் அங்குலம்தானும் முன்னேற முடியாது. மனிதனது கூட்டு வாழ்வில் அவனது ஆகச்சிறிய அலகு குடும்பமென்றால், கூட்டு வாழ்வின் ஒரு முக்கிய பெரிய அலகு தேசியமாகும்.

தேசியவாதம் மிகவும் சிக்கலானது, இதனை விளங்குவதும் விளக்குவதும் சிரமமானது என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு. இதில் உள்ள பிரதானமான பிரச்சினை, இது பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டதிலிருந்தே ஆரம்பமாகின்றது.

தேசியவாதத்தை அதன் கருப்பையில் இருந்தும், அதன் இயல்பில் இருந்தும் அடையாளம் காணவேண்டியது அவசியமானது. மனித குலம் கண்டு கொண்ட மிகவும் முன்னேற்றகரமான விடயங்களில் ஒன்றாய் தேசியம் உள்ளது. இது சிலவேளை பிழையாகப் பிரயோகிக்கப்பட்டு இனவெறியாகவும், மேலாதிக்கவாதமாகவும், ஆக்கிரமிப்பு வாதமாகவும் மாறிய உதாரணங்கள் உள்ளன. இங்குள்ள பிரச்சினை என்னவெனில் இனவெறி, மேலாதிக்க வாதம், ஆக்கிரமிப்புவாதம் என்பனவற்றை தேசியத்திலிருந்து பிரித்து இனம் காணவேண்டுமே தவிர, இவற்றை தேசியத்துடன் சேர்த்துக் குழப்பக்கூடாது. அடுத்து, தேசியத்தை ஒரு குறுகிய வாதம் என்று கூறுவோர் அதனைப் பிழையாக விளங்கிக் கொண்டோரும், ஒரு வரலாற்றுக்கால கட்டத்தில் சகல மனிதகூட்டமும் அதனை அடைந்தே ஆகவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களுமேயாவர். தேசிய வாழ்வை பூர்த்தி செய்யாமல் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இடமில்லை. அவ்வாறு வளர்வதாக அவர்கள் சொல்வார்களேயானால் அது குறைவிருத்தியே தவிர வேறொன்றுமில்லை. அதாவது குறைவிருத்தியென்பது, பொருந்தா வளர்ச்சி அல்லது சூம்பிய உடம்பிற்கு கனமான பெருத்த தலைபோன்றதே அது.

நவீன அர்த்தத்தில் தேசியத்தின் தொட்டில் மேற்கைரோப்பாவாகும். தேசிய சமூகமும், தேசிய வாழ்வும் மனித குலம் அதுவரை கண்டறிந்த முன்னேற்றங்களில் ஒரு சிறப்புக்கூறாகும். மனிதன் என்றால் கூட்டுவாழ்வைக் கொண்டவன். கூட்டு வாழ்வின்றி எந்தவொரு மனிதனாலும் (தெய்வமே மனிதனாய்ப் பிறந்தாலும் கூட) ஓர் அங்குலம்தானும் முன்னேற முடியாது. மனிதனது கூட்டு வாழ்வில் அவனது ஆகச்சிறிய அலகு குடும்பமென்றால், கூட்டு வாழ்வின் ஒரு முக்கிய பெரிய அலகு தேசியமாகும். குடும்பம், கூட்டுக்குடும்பம், கிராமம், இனக்குழு எனப் பல கூட்டு வாழ்வு அலகுகள் உள்ளன. இந்த வரிசையில் பெரிய கூட்டலகாய் குடும்பம் உள்ளது.

குடும்பம் எனும் கூட்டலகு தனது வாழ்விற்கும், வளர்ச்சிக்குமாக அடுத்த பெரிய கூட்டலகுடன் கூடி இசைவு படுகிறது. அதனை விடவும் வளர்ச்சிக்கு இன்னொரு பெரிய அலகு தேவைப்படும்போது அந்த அலகைத் தாண்டி அல்லது கரைத்து அடுத்த பெரிய அலகுடன் குடும்பம் தன்னை இணைத்துக் கொள்கின்றது. இந்த வகையில் குடும்பம் எனும் தொடக்க அலகு தன்னை இணைத்துக் கொள்ளும் பெரிய கூட்டலகாய் தேசியம் உள்ளது (குடும்பம் எனும் தொடக்க அலகு சர்வதேசியத்தின் உச்ச வளர்ச்சியில் பரிணாம ரீதியில் கரைந்து போய்விடும் என்ற கருத்து உண்டு. இக்கட்டுரையின் தேவையில் அது விவாதத்துக் குரியதல்ல).

இனக்குழு வாழ்வுமுறை, வட்டார வேறுபாடு (பிரதேச வேறுபாடு), பரம்பரை அந்தஸ்து (உதாரணம் நேரு பரம்பரை, பண்டாரநாயக்க பரம்பரை), பிறப்பால் உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற நிலை போன்ற இத்தகைய வேறுபாடுமிக்க அலகுகளைத் தகர்த்து, தேசியம் எனும் ஒரு வட்டத்துக்குள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமதையானவர் என்பதுடன், ஒரு தேசியத்துடன் மற்றைய தேசியம் உயர்வு தாழ்வின்றி சமதையானது என்பதே தேசிய வரலாற்றின் குறிக்கோளாகும். தேசியத்தின் அடிப்படையில் அனேகருக்கும் பொதுவான வாழ்வுமுறை, அரசியல் சமூக விடயங்களில் சாமானியர்களின் சகாப்தத்தைத் தோற்றுவித்தமை என்பன தேசியத்தின் சிறப்பம்சங்களாகும்.

பல்வேறு அடிப்படைகளில் தனித்தனியே சிறு சிறு குழுக்களாக வாழ்ந்துவந்த மனிதர்களின் குறுகிய எல்லைகளைத் தகர்த்து, ஒரு தேசிய அடையாளத்தின் கீழ் ஒரு பெரும் வெகுசனத் திரட்சியை உருவாக்கியமைதான் தேசியவாதமாகும். இத்தகைய வெகுசனத் திரட்சியை ஐரோப்பாவில் கைத்தொழில் வளர்ச்சியே சாத்தியமாக்கியது. அதாவது கைத்தொழில் வளர்ச்சிதான் மூலப்பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நகர்த்தவும் ஒன்று திரட்டவும் பின்பு பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை பரந்த அடிப்படையில் விநியோகிக்கவும் சந்தைப்படுத்தவும் இதன் நிமித்தம் போக்குவரத்துச் சாதனங்களினாலும் போக்குவரத்து வீதிகளினாலும் தொலைத்தொடர்பு சாதனங்களினாலும் மனிதன் இடையறாது ஒருவருடன் ஒருவர் தொடர்பு படவும் ஒன்று குவியவும் முடிந்தது. இவ்வாறு உருவான வெகுசன திரட்சிக்கேற்ப வெகுசன அரசியல் உட்பட பல்வேறு வெகுசனப் பண்புகள் தோன்றின. நிலத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த கிராமிய, நிலப்பிரபுத்துவ உள்ளொடுங்கிய வாழ்விற்குப் பதிலாக நிலத்திலிருந்து பிடுங்கப்பட்டு எங்கும் நகர்ந்து இடையறாது பல்வேறு புதிய தேடல்களுடன் மனிதன் குவிகின்ற வெகுஜனப் பண்பைத்தான் நாம் தேசியக் கலாச்சாரம் என்று கூறுகின்றோம். அதாவது பழைய சிறு வட்ட வாழ்வையும் அதன் குறுகிய உறவுகளையும் உடைத்து தேசிய அடிப்படையில் குவியும் பெரிய, புதிய சனத்திரட்சிக்கு ஏற்ப ஒத்துப்போதலையும் அதற்குப் பொருத்தமான பழக்க வழக்கங்களையும் அதற்கேற்ப புதிய ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் சேர்த்தே "தேசிய கலாச்சாரம்" என்று அழைக்கின்றோம். சிலர் கலாச்சாரம் என்றவுடன் ஆடை, அணிகலங்களையும் மேளதாளங்களையும் கொண்டாட்டங்களையும் நினைக் கின்றார்கள்.

ஒரு தேசியத்திலிருந்து இன்னொரு தேசியத்தை வேறுபடுத்தி அடையாளம் காண உதவும் சில பண்பாட்டுக் குறியீடுகள்தான் இவை. ஆனால் இவை மட்டும் பண்பாடாகிவிடாது. அதாவது, தனித்துவமான தேசிய அடையாளங்களுடன் கூடியதும், புதிதானதுமான வெகுசன திரட்சிக்கேற்ப புதிய அரசியல், பொருளாதார, சமூக மேம்பாட்டினைத்தான், "தேசிய பண்பாடு" என்கின்றோம்.

ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய வளர்ச்சி இன்னொரு தேசிய வெறியாலோ, அல்லது தேசிய மேலாதிக்கத்தாலோ அல்லது தேசிய ஆக்கிரமிப்பாலோ தடை செய்யப்படுமிடத்து பாதிக்கப்படும் தேசியம், அத்தடையை அகற்றுவதற்காக நடாத்தும் போராட்டம், "அந்நிய எதிர்ப்புத் தேசியப் போராட்டம்" எனப்படும்.

சிறிய குழு அலகிலிருந்து வெகுசனத் திரட்சியை நோக்கிய வெடிப்பு (உடைப்பு) ஏற்பட்டுச் செல்லுகையில் அத்தகைய உடைப்பானது மதம், அல்லது மொழி அல்லது இனம் (உடல் அமைப்பு வேறுபாடு) அல்லது பெரிய அளவினதான பிரதேச தனித்துவம் என்ற எல்லைவரை விரிந்து ஆனால் அந்த எல்லையை உடைக்க முடியாதவிடத்து அத்தகைய எல்லையின் பெயரால் (மொழி, மதம், இனம் என்பதன் பெயரால்) தம்மை ஒரு தேசியம் என அழைத்துக் கொள்ளுதலும், அந்தத் தேசியத்துள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமனானவர் என்பதுடன், ஒரு தேசியம் மற்றைய தேசியத்துக்குச் சமனானதும் என்பதே தேசியவாதமாகும். இதனால் தேசியவாதமென்பது, முற்றிலும் வெகுசனத்தன்மை கொண்டதும் (சனநாயக உள்ளடக்கம் கொண்டதும் என்பதாகும். சனநாயகம் என்பது அனைவருக்கும் சமஉரிமை உண்டு என்பது, ஒருவர் தனக்கு இருப்பது போன்ற அதே உரிமை மற்றவருக்கும் இருக்கின்றதென்பதை ஏற்றுக்கொள்வது. அதே போல ஒரு தேசியத்திற்கு இருக்கும் உரிமை போலவே மற்றத் தேசியத்திற்கும் உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்வது என்ற ஒரு புதிய கலாச்சாரத்தையே "தேசிய சனநாயகம்" என்கின்றோம்.

சிறு உள்வட்ட எல்லைகளை உடைத்துக் கொண்டு போகும் பாதையில் மேற்கூறியவாறு மொழி, மதம் போன்ற பெரிய எல்லையில் தேசியம் தடைபட்டு நின்று விடுவதால் பல தேசியங்கள் தோன்றவேண்டியிருந்தன. இவையே பிரிட்டிஸ் தேசியம், பிரஞ்சுத் தேசியம், ஸ்பானியத் தேசியம், டச்சுத் தேசியம் எனத் தேசியங்கள் பலவாகக் காணப்படுகின்றன. எனவே தேசியத்தின் இறுதி எல்லையாக மதம், அல்லது மொழி அல்லது இன, பிரதேசத் தனித்துவம் என்பன கூட்டாகவோ அன்றி தனியாகவோ தேசியத்தின் புற உருவ எல்லைகளாகின. மேற்கூறிய அடிப்படையில் தேசியத்தை மூன்று முக்கிய அலகுகளாக வகுக்கலாம்.

1. புறவுருவ எல்லை - மொழி, மதம், பிரதேச தனித்துவம், இனப்பண்பு போன்ற வகை.

2. அகவளர்ச்சி - புறவுருவ எல்லைக்குள் இடம்பெறுவதாகிய தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடும், கூடிவாழும் பொதுவான பண்பாடும், பழக்க வழக்கங்களும் தேசியக் கலையும் வாழ்க்கைமுறையும் வெகுஜனத் திரட்சிக்கேற்ப புதிய பரந்த மனப்பாங்கு சட்டதிட்ட அரசியல் முறைகள் என்பன அகரீதியான தேசிய அம்சங்களாகும்.

3. தேசிய ஒருங்கிணைப்பிற்கான புறக்கட்டுமானங்கள் - போக்குவரத்துப் பாதைகள் - வீதி, புகையிரத வீதி - மற்றும் போக்குவரத்தும் போக்குவரத்துச் சாதனங்களும், தொலைதொடர்புச் சாதனங்கள், சுகாதார ஏற்பாடுகள், தங்குமிட வசதிகள், பொது இட வசதிகள், இவற்றிற்கு மூலமான கைத்தொழில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள், சந்தை வசதிகள் எனப்பலவாகும்.

மொழி, மதம், பிரதேசம் மற்றும் இனக்கூறுகள் போன்ற அம்சங்கள் தேசியவாதம் தோன்ற முன், ஏற்கனவே இருந்த அம்சங்களாகும். அனைவரும் திரண்டு கூட்டிணைந்து பெரும் சனத்திரளாக வாழ்வதற்கான புதிய பண்பாட்டின் தோற்றமும் புறக்கட்டுமானமும்தான் தேசியத்தில் இடம்பெறும் புதிய அம்சங்களாகும். தேசிய கட்டுமான

தொடர்ச்சி 2ம் பக்கம்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் பெருவீரன் வன்னித் திருமன்னன் பண்டாரவன்னியனின் 194வது நினைவு தினம்

சந்திரிகாவின் ஒரு தேசம், ஒரு மக்கள் எனும் கோட்பாடு பொய்யென்பதற்கு வரலாற்றுச்




சான்றாக விளங்குவது வன்னியர் வரலாறு.

எமது வரலாற்றை நாம் அறியாவிடின் எங்கள் எதிரி எம்மை வரலாறு அற்ற இனம் ஆக்கிவிடுவான். இதற்கு உதாரணமாக நாம் எமது வரலாற்றை உணராது வாழ்கையில் சந்திரிகா பண்டார நாயக்கா எமது வரலாற்றை மறுத்து எம்மை சிங்கள அரசர்களின் கீழிருந்த ஒரு உபஅரசின் தொடர்ச்சந்ததி என அநுராதபுரத்தில் போதிமர நிழலில் அருளுரை பகன்றுள்ளார். அதுவும் போதாதென்று தனது வரலாற்று வக்கிரத்துக்கு அரசியல் வடிவம் கொடுத்து ஒருதேசம், ஒரு மக்கள் என்ற தனது பௌத்த சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்புச் சிந்தனைக்கு கருத்து வடிவம் கொடுத்தும் வருகிறார். இந்த நிலையில் சந்திரிகாவின் ஆக்கிரமிப்புக் கோசமான ஒரு தேசம், ஒரு மக்கள் என்பதன் போலித்தனத்தை உலகுக்கு எடுத்துகாட்டுவதற்கு சிறந்த நாளான பண்டாரவன்னியனின் 194 ஆவது நினைவுதினம் ஒக்டோபர் 31 ம் திகதி வன்னிப்பெருநிலப்பரப்பு உட்பட தமிழீழதேசம் எங்கணும் நினைவுகூரப்பட்டது.

வன்னி மன்னர்கள் தமிழீழ வரலாற்றின் வீரபுருசர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதனால்தான் வன்னி அரசான, வன்னிப் பெருநிலப்பரப்பு "அடங்காப்பற்று" என வீர அடைமொழி கொண்டு அழைக்கப்பட்டது. இந்த வன்னிப்பிரதேச வரலாறு, ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு எதிரான வன்னியரின் வீரத்தினை தமிழீழ வரலாற்றின் ஒரு அங்கமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. இலங்கையின் முதலாவது டச்சுத் தேசாதிபதியாகிய இலஸ்ரிய வான் ரூவன்ஸ் தமிழீழ அரசு குறித்து பின்வருமாறு கூறுகிறார்:

"பழைய மலபார் (தமிழர்) அரசர்களின் ஆதிக்கம் பரந்து காணப்பட்டது. உயர்ந்த மலைத்தொடர்கள் மீதும் வேடர்களின் நிலப்பரப்புக்கள் மீதும் இந்த ஆதிக்கம் பரந்து இருந்ததோடு புத்தளம், கற்பிட்டியின் நடுப்பகுதிக்கும் அது பரந்து இருந்தது. அது மேலும் தெற்கு நோக்கி விரிவாக்கப்பட்டு நீர்கொழும்பு வரையான ஈழத்தின் மேற்குக்கரையோரமும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. கிழக்குப் பகுதியில் பாணமை வரைக்கும் கும்புக்கல் ஓயாவிலும் அது பரந்து இருந்தது. இன்றுங்கூட விளக்கமாக மலபார் (தமிழ்) மொழியே இங்கு பேசப்படுகின்றது." "(Rycklof Van Goeas. Instructions for the guidance of the opperkoopman Anthony Pavilions Commandeur and Council of Jaffna Patam, 1658)"

தேசாதிபதி வான்ரூவன்ஸின் கூற்று வடக்கே இருந்த யாழ்ப்பாண அரசு, அடங்காப்பற்று வன்னிமைகள், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வன்னிமைகள், புத்தள வன்னிமைகள் ஆகியவை பற்றியாகும்.

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பத்தில் கண்டி வீழ்ச்சியுறுவதற்கு முன்பு, 10-7-1813 இல் கவர்ணர் சேர். றொபேர்ட் பிறவுண்ரிக் காலனித்துவ நாடுகளின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் "தமிழ்மொழி எல்லா மாநிலங்களிலும் – புத்தளம் முதல் மட்டக்களப்பிற்கு வடக்கான பகுதிவாழ் மக்களின் பிரதேசம் முழுவதும் இப்பகுதிகள் அடங்கலாக பேசப்பட்டு வருகிறது. அதனால் சிங்கள மொழிக்கு நிகரான மொழியாக தமிழ்மொழியையும் சரிசமானமாகக் கருதுவதில் எந்தவித தவறுமில்லை" எனக்குறிப்பிட்டுள்ளார். இந்த மேலைத்தேய காலனித்துவ தேசாதிபதிகளின் குறிப்புகள் தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாண அரசு, அடங்காபற்று வன்னிமைகள், திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட வன்னிமைகள் புத்தள மாவட்ட வன்னிமைகள் அடங்கியிருந்தமையும் தமிழ் மொழி இலங்கைத்தீவு முழுவதும் அறிந்த தமிழர் தாயகத்தின் தாய்மொழியாக விளங்கியதையும் உறுதிப்படுத்துகிறது.

போர்த்துக்கேயர்கள், சிங்களத் தேசக்கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி 116 வருடங்களின் பின் கடும்பிரயத்தனங்களின் மூலம் யாழ்ப்பாண அரசை கைப்பற்றிய போதிலும் அடங்காப்பற்று எனப்படும் வன்னி அரசர்களின் இராச்சியத்தைக் கைப்பற்றவில்லை. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுற்ற பின்னர் காலனித்துவத்திற்கு எதிராக வீரமிகு எதிர்ப்பினை வன்னிமைகள் வெளிப்படுத்தின. பிரித்தானியர் கண்டி அரசை கைப்பற்ற முயன்ற 1800களின் ஆரம்பத்தில் வன்னியர்களும் கண்டி அரசர்களும் இணைந்து பிரித்தானியருக்கு எதிரான காலனித்துவ எதிர்ப்பை வெளிப்படுத்திவந்தமை வரலாறு.

காலனித்துவத்துக்கு எதிரான வன்னி அரசர்களுள் இறுதி அரசனாக பண்டாரவன்னியன் பிரித்தானிய பேரரசினை எதிர்த்து நின்று 1803 இல் கற்சிலைமடுவில் உட்துரோகத்துடன் கூடிய சதி முயற்சியால் பிரித்தானியரால் கொல்லப்பட்டார். பண்டாரவன்னியனின் வீரச்சாவுடன் வன்னி நிலப் பரப்பில் பிரித்தானியர் மேலாண்மை செலுத்த முற்பட்ட போதிலும் அது கைகூடாதவாறு ஒரு வகையான கெரில்லாப் போரில் வன்னியர்கள் ஈடுபட்டு வந்துள்ளமைக்கு சான்றுகள் உண்டு. கண்டி அரசினை இறுதி மன்னரான சிறிவிக்கிரம ராசசிங்கன் எனும் பட்டப் பெயர்கொண்ட கண்ணுச்சாமி எனும் தமிழ் அரசனிடம் இருந்து 2-3-1815 இல் பிரித்தானியர் கைப்பற்றினர். ஆயினும் வன்னிப்பகுதி எதிர்ப்பு ஓயவில்லை. 1832 ஆம் ஆண்டில் பனங்காமத்து வன்னியர்களால் பிரித்தானியகொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த டிறிபெக் கோட்டை தாக்கப்பட்டு, அங்கிருந்த பிரித்தானியர்கள் அழிக்கப்பட்டு பிரித்தானியக் கொடியும் கிழித்தெறியப்பட்டது என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. கூட்டுமொத்தமாக 1832 இன் இறுதியிலேயே வன்னியரின் எதிர்ப்பு பிரித்தானியரால் ஒடுக்கப்பட்டது. இதையடுத்து 1833 இல் பிரித்தானியக் காலனித்துவ அரசால் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைத் தீவின் தமிழ், சிங்கள அரசுகள் நிர்வாக தேவைக்கென ஒருங்கிணைக்கப்பட்டன. எனவே வன்னியர் வரலாறு இலங்கைத்தீவில் யாழ்ப்பாண அரசும் அதன் தொடர்நிலை வன்னியர் ஆட்சியும் ஏற்படுத்திய சுதந்திரக்கனவினை வெளிப்படுத்தி நிற்கிறது. இலங்கைத்தீவு இரு தேசங்களைக் கொண்டிருந்தது, இருக்கிறது, இனியும் கொண்டிருக்கும் என்ற யதார்த்தத்தினை சந்திரிகாவும், அவரின் அரசும் உணர்ந்து தமிழர் பிரச்சினையை உரிய வழியில் அணுக முற்படுவார்களாக. ✷

(சூ. பற்றிமாகரன்)

# சிறிலங்கா தமிழர்களுக்குச் சட்டவிரோத அரசு கொழும்புக் கைதுகள் இதனையே குறிக்கிறது

## யாழ்.குடாவிலும், தென்தமிழீழத்திலும் இராணுவ ஆட்சிக் கெடுபிடிகள்

கொழும்பு மாநகரைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்ட இருபதினாயிரம் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் தலைநகரத்தின் சகல வீதிகளையும் மூடிவிட்டு தமிழின வேட்டையில் இறங்கி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைக் கைதாக்கிச் சென்றுள்ளனர். இந்த தமிழ் மக்கள் மீதான இராணுவ முற்றுகைக்கு சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அநுருத்த ரத்வத்தை நேரடி மேற்பார்வை செய்துள்ளார். 25.10.97 சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு கொழும்பு நகருக்கான சகல போக்குவரத்துத் தொடர்புகளையும் துண்டித்த சிறிலங்காப் படையினர் வானொலி தொலைக்காட்சி அறிவிப்புக்கள் மூலம் யாரையும் வீதிகளில் நடமாட வேண்டாம் என எச்சரித்துவிட்டு தெருத் தெருவாக தமிழர்களைத் தேடும் படையெடுப்பை ஆரம்பித்தனர்.

முப்படையினரும் கூட்டாகத் தேடுதலில் இறங்கியமை மற்றொரு முக்கியத்துவத்தை இத் தேடுதலிற்கு வழங்கி, இதனைத் தேடுதலா அல்லது முற்றுகையா என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. கொழும்பிலும் கொழும்பின் சுற்றுப்புறங்களிலும் உள்ள தமிழ் வீடுகள் அனைத்தும் சல்லடை போட்டுத் தேடப்பட்டுள்ளன. இதில் வேடிக்கை என்னவென்றால் தேடுதலின் போது கைதாகிக் கொண்டு செல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிறிலங்கா காவற்துறையில் பெயர் பதிந்து முறைப்படி அனுமதி பெற்று வாழ்ந்து வந்தவர்கள் என்பதேயாகும். பால், வயது வேறுபாடின்றி நள்ளிரவு முதல் மறுநாள் மாலை வரை ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதாக்கப்பட்டு சங்கராஜ வித்தியாலயம், அல்இக்பால் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து வேறு இடங்களுக்கு இரகசியமான முறையில் அனுப்பப்பட்டுள்ளனர். சிறிலங்கா காவற்துறையின் புள்ளிவிபரப்படி ஆயிரம்பேர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இத் தொகை குறைந்தபட்ச மதிப்பீடு எனவும் கைதானோர் தொகை இதைவிட அதிகம் எனவும் பத்திரிகைகள் மதிப்பிடுகின்றன.

கொழும்பு கைதுகளுக்கான ஒரே காரணம் அவர்கள் தமிழர்களாக பிறந்தமை ஒன்றேயாகும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சர்வதேச மனித உரிமைகள் சாசனப்படி, பிறப்பின் தன்மை கொண்டு ஒருவரை கைதாக்குவதோ அல்லது பாகுபாடு செய்வதோ சர்வதேசக் குற்றமாகும். கைது செய்யப்படுபவர்கள் மேல் ஆயுத நெருக்குதல்கள் பயன்படுத்தப்பட்டு அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஏதோ ஒரு வகையில் உதவியதாக அல்லது தொடர்புகள் வைத்திருந்ததாக கையொப்பமிடும்படி கட்டாயப் படுத்தப்பட்டு வருகின்றனர். கொழும்புக் கைதுகளும் அதன் பிரதிபலிப்புகளும் சிறிலங்கா, தமிழர்களை எதிரிகளாகக் கருதி செயற்படுவதையே எடுத்துக் காட்டுகிறது. ஜனநாயக ஆட்சியில் தமது விருப்பத்துக்கு ஏற்ப தம்மை ஆள்பவர்களை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஆட்சியாளர் மக்களுக்கு தேவையான பாதுகாப்பையும் அமைதியையும் வழங்க வேண்டியது முக்கியமானதாகும்.

ஜனநாயகத்துக்கான விருப்பத் தெரிவு உரிமை என்பதையும், பாதுகாப்பான அமைதியான ஆட்சியை ஏற்படுத்துதல் எனும் தேவையையும் தமிழர்களுக்கு சிறிலங்கா நிராகரித்துள்ளது. இதனால், சிறிலங்கா அரசு தமிழர்களது ஜனநாயக அரசு அல்ல. அதேபோல, தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மனஉணர்வே அற்றவர்களாக தமக்குச் சாதகமான தீர்வுகளை திணிப்பதற்கான இராணுவ அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதையே மையமாகக் கொண்டு செயற்படும் சிறிலங்காவுக்கு தமிழ் மக்களது அரசியல் பணிவை ஆயுத நெருக்கத்தால் பெறுவதிலேயே அதிக ஆர்வமும் அக்கறையும் இருப்பதைக் கொழும்பிலும் யாழ். குடாநாட்டிலும் தென் தமிழீழத்திலும் இடம்பெறும் சம்பவங்கள் தெளிவு படுத்துகின்றன.

(தொடர்ச்சி 4 ம் பக்கம்....)



# இம்மாதம் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளிகளில் இதுவரை கிடைக்கப்பெற்றோரின் விபரம்.

### 2-10-97 அன்று புளியங்குளத்தில் எதிரிப்படையுடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த வேங்கைகள்.

1. மனத்தேவன்
ஆர்ப்பாயரட்ணம் சுதாகரன்
இல.09,10ம் வீட்டுத்திட்டம், நெடுங்கேணி

2. முல்லைமாறன்
அருமைத்துரை ஜெயக்காந்தன்
திருகோணமலை
த.மு. அருணா வீட்டுத்திட்டம், எல்பி. சந்தி, முத்துஜயன்கட்டு

### பின்வரும் போராளி 30-09-97 அன்று கனகராயன் குளத்தில் எதிரிப்படையுடனான மோதலில் காயமுற்றுப் பின் 2-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

3. வளவன்
முருகுப்பிள்ளை இராமச்சந்திரன், மட்டக்களப்பு

### 5-10-97 அன்று கற்கிடங்கு நோக்கி முன்னேறிய எதிரிப்படைகளுடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 31 போராளிகளின் விபரம்.

4. தமிழழகன்
புஸ்பராசலிங்கம் அகிலன், யாழ்ப்பாணம்

5. மோகனரூபன்
பஞ்சலிங்கம் சுபேந்திரன், யாழ்ப்பாணம்

6. நளன்/ தம்பி
சந்தோசம் செல்வகுமார்.
யாழ்ப்பாணம், த.மு. திருநகர் சுடலைவீதி, கிளிநொச்சி

7. முருகையன் – ஜசிந்தன்
சிவகணேசன் பரமானந்தன், யாழ்ப்பாணம்

8. சத்தியன்
பொன்னுத்துரை தர்மலிங்கம், யாழ்ப்பாணம்

9. ரகுமதி/ அமலி
அருந்தவநாதன் கலாஜினி
இல 64, 2ம் குடியேற்றம், ரெட்பாணா, விஸ்வமடு

10. குமரப்பா
மயில்வாகனம் கேதீஸ்வரன்
செட்டிக்குளம், வவுனியா.

11. நாகராசா
செல்லையா தியாகராசன், மன்னார்

12. திருக்குமரன்
அந்தோனி கிருஷ்ணராஜா
வட்டகண்டல், த.மு. மடு, மன்னார்

13. மயூரன்
மாரிமுத்து சிவயோகராஜா
இல 48, உடுக்குளம், கிளிநொச்சி
த.மு. ஆரோக்கியபுரம், அக்கராயன்.

14. குணநாதன்
செல்வராசா செல்வகுமார், மட்டக்களப்பு

15. கஜநேசன்
சாமித்தம்பி விநோதராஜன், மட்டக்களப்பு

16. புவீர்
யோகராசா சுதர்சன், அம்பாறை

17. தமிழேந்தி
கண்ணப்பன் புஸ்பராசா, அம்பாறை

18. தமிழ்சுடர்
மணியம் விஜயகுமார்
ஹட்சன் வீதி, வட்டக்கச்சி
த.மு. வல்லிபுரம், புதுக்குடியிருப்பு

19. வசந்தராஜ்
குணசேகரம் கிருஷ்ணசேகரம், மட்டக்களப்பு

20. வசந்தரூபன்
நாகலிங்கம் சத்தியசீலன், மட்டக்களப்பு

21. ரகுபரன்
சின்னராசா முரளீதரன், கிரஞ்சி, பூநகரி

22. தமிழ்க்குமில்
பண்டாரம் ஜீவா
குசைப்பிள்ளையார்கும், வவுனியா

23. இளநிலவன்
பண்டாரம் சேகர்
கொழும்பு, த.மு. 156 காத்தான் நகர், கிளிநொச்சி

24. யாழினி
பெரியகறுப்பன் செல்வகுமாரி
ரெட்பாணா, விஸ்வமடு.

25. சேந்தி/ மணிவிழி
சாமித்தம்பி ஜெயராணி
திருகோணமலை
த.மு. 6ம் வட்டாரம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு

26. ஈழவாணன் – இளையவாணன்
கார்த்திகேசு நாகராசா, திருகோணமலை

27. ரகு
தனபாலசிங்கம் சிவராசா
வேலன்குளம், பூவரசன்குளம்.

28. இளம்குமணன்
சோதிலிங்கம் சதீஸ்குமார், யாழ்ப்பாணம்

29. தவசீலன்
செல்வரட்ணம் ரகுநாதன்
ராசரட்ணம் பண்ணை, 5ம் ஒடை, பரந்தன்.

30. கண்ணா
சொக்கலிங்கம் செல்வராசா, யாழ்ப்பாணம்

31. தீப்பொறி
சுப்புலிங்கம் அருள்கரன், யாழ்ப்பாணம்

32. வளவன்
கந்தசாமி புண்ணியமூர்த்தி, திருகோணமலை

33. காவலன்/ கரமான்
தர்மலிங்கம் கணேசலிங்கம், யாழ்ப்பாணம்

34. மதுரன்
செல்லையா கணேஸ், யாழ்ப்பாணம்.

### 5-10-97 அன்று கரிபட்டமுறிப்பில் எதிர்ப்படையுடனான மோதலில் பின்வரும் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

35. மேஜர் பாபு
தம்பிராசா சிவலிங்கம், யாழ்ப்பாணம்

36. கப்டன் கருணாநிதி
இளையதம்பி தயாகுமார், வவுனியா

### 6-10-97 அன்று மட்டக்களப்பு, அருந்தலாவை காவல்துறை நிலையம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த பன்னிரு போராளிகளின் விபரம்.

37. மேஜர் மாறன்

38. கப்டன் விஜயகுமார்

39. லெப்.கோபிமாறன்/ கோமாறன்

40. 2ம் லெப். ராஜகுமார்

41. 2ம் லெப். வேதா

42. வீரவேங்கை பிரியாகரன்

43. கப்டன். வெற்றிதரன்

44. லெப். ஜெயசங்கர்.

45. 2ம் லெப். ராஜெயன்

46. 2ம் லெப். கதிரொழி

47. வீரவேங்கை பரமேஸ்வரன்

48. வீரவேங்கை கருணசீலன்

### 6-10-97 அன்று கரப்புக்குத்தி மற்றும் விஞ்ஞானன்குளம் இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலின் போது வீரச்சாவடைந்த 71 போராளிகளில் 58 பேரின் விபரம்.

49. ஈழவன்/ ரத்தினம்
நாகராசா நிமலன், மட்டக்களப்பு

50. பதிபதன்
கந்தசாமி தயாளன், மட்டக்களப்பு

51. கிளியரசன்/ பெரியன்பன்
பாக்கியராஜா ராஜய், மட்டக்களப்பு

52. ரமேஸ்காந்/ நிக்ஸியோன்
தம்பிராசா தவராசா, மட்டக்களப்பு

53. தனுஷா
காந்தபொடி குகமலர், மட்டக்களப்பு

54. பகலவராஜன் – பகலவன்
தவராஜா திருமால், மட்டக்களப்பு

55. ஜெயகாந்தன்
வெள்ளைக்குட்டி தம்பிஜயா, மட்டக்களப்பு

56. சென்செபன்
தர்மலிங்கம் திபேந்திரன், மட்டக்களப்பு

57. கவிச்செல்வன்
கந்தசாமி குகநாதன், மட்டக்களப்பு

58. விபுலானந்தன் – நிக்ஸியோன்
அமரசிங்கம் அரிச்சந்திரன், மட்டக்களப்பு

58. ஞானம்
முத்துலிங்கம் ஜெகன், மட்டக்களப்பு

60. ரோஜாகரன்
ஞானமுத்து கிருஷ்ணகுமார், மட்டக்களப்பு

61. யாழிசையன் – தரன்
நற்குணராஜன் இலங்கேஸ்வரன், மட்டக்களப்பு

62. கௌரவன்
சுப்ரமணியம் தவராசா, மட்டக்களப்பு

63. யாழினி
ராஜேந்திரன் ஜெயமலர், மட்டக்களப்பு

64. பத்திரன்
பாலசுப்பிரமணி தயாகரன், மட்டக்களப்பு

65. ஜெயகாந்தன்
சாமித்தம்பி சுந்தரமூர்த்தி, அம்பாறை

66. ஜெயபாலன்
குமார் ராஜரட்ணம்
சூரியபுரம், வற்றாப்பளை, முல்லைத்தீவு.

67. ரோய்
நடராசா பரமேஸ்வரன், யாழ்ப்பாணம்

68. சந்திரபாபு
முதுகனி ராஜேந்திரன்
சிலாவத்துறை, கொக்குப்பட்டியான், மன்னார், த.மு. மடு அகதி முகாம்.

69. அன்னதம்பி
ரத்னசிங்கம் கிருபாகரன்
ஏலம்குளம், துணுக்காய், கிளிநொச்சி

70. கண்ணாளன்
ராஜதுரை சதீஸ்குமார், திருகோணமலை

71. புயல்வேந்தன்
பொன்னுலிங்கம் சசிகரன், வேப்பங்குளம், ஓமந்தை

72. மணி – பார்த்தீபன்
சுந்தரலிங்கம் ராஜூ, திருகோணமலை

73. தயாநந்தன்
புண்ணியம் குமாரதுரை, திருகோணமலை

74. கிரிதரன் – பொம்முடி
கிருஷ்ணசாமி சந்திரசேகர், திருகோணமலை

75. சிங்கன் – அறிவரசன்
ராமசாமி சோழமுத்து தங்கராஜ்
இப்பிலிப்பிட்டித் தோட்டம்

www.tamilarangam.net

76. மதியழகி
பரராசசிங்கம் வசந்தராணி, யாழ்ப்பாணம்.

77. பாரதி
நாகராஜா ஜெயலெட்சுமி, கரும்புலியன், மல்லாவி.

78. அகிலா
அருளப்பு மரியலூஸ் கலிஸ்ரா
160 கல்மடு, ராமநாதபுரம், கிளிநொச்சி.

79. சுகீர்தன்
துரைசிங்கம் ரஜனி
யாழ்ப்பாணம், கல்லணை, மாங்குளம்

80. காண்டீபன்
ருத்திரசிங்கம் கனகரத்தினம்
ஆசிக்குளம் அரச கலவன் பாடசாலை, மதினநகர், வவுனியா

81. இரும்பொறை – கொடி
பசுபதிப்பிள்ளை உதயகுமார்
இல 300, பாவற்குளம், வவுனியா
த.மு. மடு அகதி முகாம்.

82. அன்பழகன் – சத்தியன்
ஆறுமுகம் மகேந்திரன்
இல 275 கடாபி வீதி, பிரிவு 2, தர்மபுரம்

83. பாரதி
முத்துலிங்கம் தனேஸ்கரன்
யாழ்ப்பாணம்
த.மு. இல 433, பிரிவு 4, யோகபுரம்

84. பேரன்பன்
சுவாமிநாதன் மகிந்தன் , யாழ்ப்பாணம்
த.மு. கவிலன், துணுக்காய்

85. நந்தகுமார்
மாணிக்கம் திருகேஸ்வரன் ,
திருகோணமலை

86. புயலவன்
புஸ்பராசா ஜேசுராசா, யாழ்ப்பாணம்
த.மு. அடைக்கலமாத கோயிலடி, மாத்தளன், புதுக்குடியிருப்பு.

87. குணபாலன்
ஞானசேகரம் ஞானரஞ்சிதம், வவுனியா

88. உளவுதீரன்
சுப்ரமணியம் மோகனராஜ்
திருகோணமலை,
த.மு. மடு அகதி முகாம்

89. நவமன்
திருமால் சாந்தகுமார்
புளியம்பொக்கணை, கிளிநொச்சி

90. தேவண்ணன்
வேலுப்பிள்ளை சத்தியநாதன்
கற்சிலைமடு, ஒட்டிசுட்டான்

91. ராமன் – சிந்துயன்
பொன்னுத்துரை ராஜேஸ்வரன், மட்டக்களப்பு

92. கலபரா
அந்தோனி வசந்தநிரோஜினி, யாழ்ப்பாணம்

93. பொற்கொடி
ஆறுமுகம் ஜெயசுதா, யாழ்ப்பாணம்.

94. செவ்வந்தி
இம்மானுவேல் டெல்சியா, யாழ்ப்பாணம்

95. மதிவதனா
உதயகுமார் பரமேஸ்வரி , யாழ்ப்பாணம்

ரகுபதி
நாகலிங்கம் அனுசா
யாழ்ப்பாணம், த.மு. புதுக்குடியிருப்பு

97. கீதாஞ்சலி
அழகுமுத்து ஜெயசுதா
சந்திரசேகரம் வீதி, சுதந்திரபுரம், உடையார்கட்டு

98. நித்தி
செல்லையா மேரி யூலியா
யாழ்ப்பாணம்

99. குழலினி
ரத்னசாமி சுகந்தினி (தங்கா)
யாழ்ப்பாணம்

100. வளர்மதி
ராமுபிள்ளை தங்கரத்தினம்
கோழியகுளம், ஓமந்தை

101. குட்டியா
செல்லையா சாந்தினிதேவி
யாழ்ப்பாணம்
த.மு. ஒட்டிசுட்டான்

102. ரகுமதி – விடுதலை
விவேகானந்தன் வசுமதி
யாழ்ப்பாணம்

103. தர்சினி
அடைக்கலம் கிருஷாந்தினி
முத்துஐயன்கட்டு

104. இன்மொழி
கந்தசாமி லெட்சுமி
அம்பலவன்பொக்கணை

105. வெண்ணிலா
சுப்பு ஜெயராணி
கிராஞ்சி, பூநகரி

106. இன்பன்
கணேஸ் ரவி
5ம் ஒடை, கிளிநொச்சி
த.மு. 25ம் ஒடை, பிரமந்தனாறு, விஸ்வமடு.

**பின்வரும் வேங்கைகள் 5-10-97 அன்று கறுப்புக்குதியில் நடைபெற்ற மோதலில் காயமுற்றுப் பின் 11-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

107. தணிகைவேல்
அச்சுதன், யாழ்ப்பாணம்

108. சுடரொழி
மயில்வாகனம் சங்கர், யாழ்ப்பாணம்

**13-10-97 அன்று பெரியமடுவில் எதிரிப்படைகளுடனான மோதலில் வீரச்சாவடைந்த போராளிகள்.**

109. பிரசாந்தன்
துரைசிங்கம் சதீஸ்வரன்
விளாத்திக்குளம், ஓமந்தை

110. பாலகுமார்
தர்மரத்தினம் தர்மசீலன்
கரடிப்போக்கு, கிளிநொச்சி

111. உத்தராங்கன் – அரியதுரை
நவரட்ணம் விஜயகுமார்
மட்டக்களப்பு

112. சந்திரகாந்தன்
அழகுப்பொடி சிவா
மட்டக்களப்பு

113. நெடுமாறன்
ராசு தாமோதரம்பிள்ளை
செல்வநகர், கிளிநொச்சி

114. தயாபரன்
விஜயசிங்கம் சுகந்தராஜா
யாழ்ப்பாணம்

115. மறைவாணன்
சிவஞானசுந்தரம் பிரதீபன்
திருகோணமலை

116. அரிகிரிநாதன்
சிங்கராசா சந்திரசேகரம்
மட்டக்களப்பு

117. சாதனா
சுந்தரலிங்கம் சுதர்சினி, மட்டக்களப்பு

118. கண்ணகி
சாமித்தம்பி வனிதா, மட்டக்களப்பு

119. புதியவள் – வாசுகி
ஆனந்தன் அன்னமேரி, கண்டி

120. லோகா – குணவதி
செல்வராசா சிவமலர், யாழ்ப்பாணம்

121. நேசமலர்
ராஜா ரதீஸ்வரி, யாழ்ப்பாணம்

122. நித்தியா
ராமசாமி நாகபூரணி, யாழ்ப்பாணம்

123. கீர்த்தனா
செல்லையா சீதா
இந்துபுரம், முறிகண்டி, கிளிநொச்சி

124. விவேகா
செல்வராஸ் ரேணுகா, யாழ்ப்பாணம்

125. சுமிதா
அல்பிரட் மேலிற்றா
யாழ்ப்பாணம், த.மு. முழங்காவில்

126. அகிலா
சுப்ரமணியம் புஸ்பராணி
மட்டக்களப்பு

127. கனகேஸ்வரன்
முத்துசாமி சிவலிங்கம்
யாழ்ப்பாணம்
வன்னீர்க்குளச் சந்தி, ஆனைவிழுந்தான்.

128. கடல்மணி
சின்னத்தம்பி விஜயகுமார்
சிலாவத்தை, ஊற்றங்கரை, முல்லைத்தீவு
த.மு. புதுக்குடியிருப்பு

129. மகாலிங்கம்
அலெக்சாண்டர் சுரேந்திரகுமார்
சுதந்திரபுரம், உடையார்கட்டு

130. அன்பரசன்/ அருணா
சொக்கலிங்கம் கஜேந்திரன்
யாழ்ப்பாணம்
தேவிபுரம், புதுக்குடியிருப்பு

131. தமிழவன்
கிருஷ்ணசாமி கிருஷ்ணகுமார்
பாரதிபுரம், விஸ்வமடு

132. சந்தனன்/ வரதன்
நடேசன் தமிழ்ஜோதி
யாழ்ப்பாணம்
மணிவண்ணன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி

133. மிதுநளினி
சங்கரப்பிள்ளை சுகுநாவதி
யாழ்ப்பாணம்
த.மு.முத்துஐயன்கட்டு, வலது பக்கம், ஒட்டிசுட்டான்.

134. திருமகள்
பாலசுப்பிரமணியம்
வசந்தரூபி
விஞ்ஞானன் குளம்,
கனகராயன்குளம்
த.மு. பிரிவு 01, மல்லாவி



135. ஜெயா
பொன்னம்பலம்
சத்தியதேவி
யாழ்ப்பாணம்
த.மு. இல 49 விஸ்வமடு

136. வனப்பிரியா
மயில்வாகனம் தர்சினி
5ம் ஓடை, பரந்தன், காந்திகிராமம், கோணாவில், கிளிநொச்சி

137 ரோஜிதா
பொன்னுத்துரை கோணேஸ்வரி
யாழ்ப்பாணம்
த.மு. பிரிவு 07 இராமநாதபுரம், வட்டக்கச்சி

138. நிதா
தாமோதரம்பிள்ளை துஷ்யந்தினி
பெருஞ்சாலை, கேடில்ஸ் வீதி, கண்டாவளை

139. அனுஷா
குணரட்ணம் சுமதி
திருகோணமலை
த.மு. உடையார்கட்டு, விஸ்வமடு

**பின்வரும் போராளி 5-10-97 அன்று விஞ்ஞானகுளம் இராணுவ முகாம் மீதான தாக்குதலில் காயமுற்று 14-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்**

140. குன்றன்
பேரின்பநாதன் தவயோகநாதன்
யாழ்ப்பாணம்

**பின்வரும் போராளி 8-10-97 அன்று ஜெயசிக்குறுய் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச்சமரில் காயமுற்று 15-10-97 அன்று வீரச்சாவடைந்தார்**

141. நஜந்தன்
நடராசா கோவிந்தராசா
மட்டக்களப்பு

**பின்வரும் போராளிகள் 13-10-97 அன்று பெரியமடு முகாம் மீதான தாக்குதலில் காயமுற்று 17-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.**

142. தற்பரன்
நடேசன் தினகரன், மட்டக்களப்பு

143. கலியுகன்
முருகையா சிங்கராசா
மட்டக்களப்பு

**பின்வரும் போராளி 18-10-97 அன்று மட்டக்களப்பு வன்னேரியில் வாகரைக்கும் பன்னனைக்கும் இடையே ரோந்து சென்ற இராணுவத்தின் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.**

144. மேஜர் விஜயரட்ணம்
வெண்பொடி மகேந்திரன்
மட்டக்களப்பு

**பின்வரும் போராளி 18-10-97 அன்று தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபத்து காரணமாக காயமுற்று 19-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.**

145. விற்கொடி
சந்திரகுமார் கதிரோன்,யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**புல் மோட்டைக் கடற்பரப்பில் 19-10-97 அன்று நடைபெற்ற வெற்றிகரமான கடற்சமரில் வீரச்சாவடைந்த இரு கடற்கரும்புலிகளினதும் ஏனைய 3 கடற்புலிகளினதும் விபரம்.**

146. கடற்கரும்புலி
மேஜர் சிறீ/ திருமாறன்
கணேசபிள்ளை ரவிச்சந்திரன்
யாழ்ப்பாணம், த.மு. கவிலன்குளம்
தேவாலயத்திற்குஅருகாமையில்,
துணுக்காய்

147. கடற்கரும்புலி கப்டன் சின்னவன்
நந்தகோபால் சுரேஸ்
யாழ்ப்பாணம்

148. கடற்புலி மேஜர் வீரமணி

149. கடற்புலி கப்டன் நவநீதன்

150. கடற்புலி கப்டன் வரதன்

**பின்வரும் போராளிகள் 20-10-97 அன்று வடமராட்சியில் சிங்களப்படையுனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

151. கமலேஸ்வரன் – கமலேசன்
பன்னீர்ச்செல்வம் சாந்தரூபன்
யாழ்ப்பாணம்

152. பூவழகன்
ராஜேஸ்வரன் துளசிதரன்
யாழ்ப்பாணம்

**பின்வரும் போராளிகள் 20-10-97 அன்று கரிபட்டமுறிப்பில் சிங்கள இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

153. மேஜர் திலீப்
பாலசுந்தரம் கார்த்திகேயன்
திருகோணமலை

154. கப்டன் கலைச்செல்வன்/
தில்லைவாணன்.
ரத்தினராசா நிர்மலரூபன்
யாழ்ப்பாணம்

**பின்வரும் போராளிகள் 21-10-97 அன்று கரிபட்டமுறிப்பில் சிங்கள இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.**

155. விதுசன்
சோதிலிங்கம் கருணாகரன்
அம்பாறை

156. அழகேஸ்
சின்னத்துரை யோகராசா
மட்டக்களப்பு

157. ராசன்
கணேஸ் தயாபரன், மட்டக்களப்பு

**பின்வரும் போராளி 1991இல் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் காயமுற்று 21-10-97 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.**

158. பொபி/ அன்னநம்பி
சின்னத்தம்பி மகேந்திரராசா
யாழ்ப்பாணம்

**பின்வரும் போராளிகள் 30-10-97 அன்று கரிபட்டமுறிப்பில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

159. துளசீலன்/ ரேகதேவன்
விநாயகம் யோகேஸ்வரன்
மட்டக்களப்பு

160. ஜனமுரளி
கணபதிப்பிள்ளை பாக்கியராஜா
மட்டக்களப்பு

161. துறவிகன்
ஆறுமுகம் மயில்வாகனம்
மட்டக்களப்பு

**31-10-97 அன்று கரிபட்டமுறிப்பில் சிங்கள இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த போராளி.**

162. 2ம் லெப். நிஜந்தா
சிவசம்பு அருதினி
யாழ்ப்பாணம்

**இம்மாதம் முருங்கனில் சிங்கள இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் விபரம்.**

163. மேஜர் நிலானி
கனகசிங்கம் விக்னேஸ்வரி
யாழ்ப்பாணம்

164. கப்டன் ஈழச்செல்வன்
சுப்ரமணியம் விஜயலிங்கம்
உடையார்க்கட்டு

165. கப்டன் பத்மன்
பாக்கியநாதன் டெனில்
யாழ்ப்பாணம்

166. கப்டன் நக்கீரன்/ நவாஸ்
பாக்கியநாதன் யோன்சன்
திருகோணமலை

167. லெப். குமுழினி
லோகநாதன் கலைவாணி
குழவிசுட்டான், நெடுங்கேணி
த.மு.வவுனிக்குளம், பாண்டியன்குளம்

168. லெப்.கலையரசி
தங்கவேல் சந்திரகலா
கொல்லர் புளியங்குளம், மாங்குளம்

**இம் மாதம் பின்வரும் போராளிகள் பிறிதொரு சம்பவத்தின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.**

169. கப்டன் வடிவேல்
சாமித்தம்பி வடிவேல்
அம்பாறை

170. 2ம் லெப். நிலாந்தன்
செல்வராசா நிலாந்தன்
மட்டக்களப்பு

171. 2ம் லெப். செழியன்
வைரமுத்து திருமாள்
மட்டக்களப்பு

**அத்துடன் பின்வரும் போராளிகள் 14-05-97 அன்று கோடாலிப்பறிச்சானில் சிங்களப் படைகளுடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

1. லெப். ஒவியன்
பூபாலசிங்கம் வசந்தன்
யாழ்ப்பாணம்
த.மு. பொன்னகர், முள்ளியவளை

2. லெப். முகில்வேந்தன்
சந்திரராசா சுதர்சன்
யாழ்ப்பாணம்
த.மு. 4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு

**27-05-97 அன்று முல்லைக்கடற்பரப்பில் விபத்துக்கராணமாக படகு வெடித்ததில் பின்வரும் கடற்கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

3. கடற்கரும்புலி மேஜர் அன்பு
முத்துவேல் ரவீந்திரன்
மன்னார்

4. கடற்கரும்புலி மேஜர் ஈழமகன்
தர்மலிங்கம் திருகணேசன்
மட்டக்களப்பு

5. கடற்கரும்புலி மேஜர் விநோதன்
தேவசிகாமணி வித்தியகுமார்
யாழ்ப்பாணம்
த.மு புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு

6. கடற்கரும்புலி மேஜர் வலம்புரி
கைலாசபிள்ளை புஸ்பாவதி
அனுராதபுரம்
த.மு. அலவாகை, மன்னார்

7. கடற்கரும்புலி மேஜர் சந்திரா
தம்பு செபஸ்தியன் மரியாரெட்டி
யாழ்ப்பாணம்
த.மு. கோபி வீட்டுத்திட்டம், சவுக்கடி, சேமங்குன்று, மன்னார்

8. கடற்கரும்புலி கப்டன் தீத்தா
பாலசிங்கம் கீதரூபன்
யாழ்ப்பாணம்

9. கடற்கரும்புலி கப்டன் சுதாகர்
கனகசபை அருள்
மட்டக்களப்பு

10. கடற்கரும்புலி
கப்டன் அருளரசன்/ மதீன்
தங்கராசா தியாகராசா
மட்டக்களப்பு

**இம்மாவீரர்களிற்கு எமது வீர வணக்கங்கள்.**

## மாவீரர்களே !

**நெஞ்சில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்**
**நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்**
**உங்களின் நினைவுடன் பயணம் தொடரும்**
**ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்**


# மாவீரர்நாள் யேர்மனி 1997

**காலம் :**
22 - 11 - 1997
சனிக்கிழமை,
16.00 மணி

**இடம் :**
Revier Park
Gysen Berg
Am Revier Park 40
44627 Herne

**எழுச்சிக்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்**

மாவீரர் தியாகத்தை ஆராதிக்க ஒன்றுகூடுவோம்
தமிழீழ விடுதலைப்புலிகள் ( யேர்மனிப் பணியகம்)

# நெதர்லாந்தில் மாவீரர் நாள் 1997

**காலம் :**
30 - 11 - 1997
ஞாயிறு,
மாலை 3 மணி

**இடம் :**
De Rijswijkse
Schouwburg
Generaal Spoorlaan 10
Rijswijk (Den Haag)

மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிக்கான வெற்றிக்

தமிழீழ விடுதலைப் புலிகள் - நெதர்லாந்துப் பணியகம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை





# வைத்தியங்கள்

## கப்டன் கஜன்

பாரிஸ் மண்ணில்.சிறிலங்கா அரசபயங்கரவாதத்தின் விளைவால் படுகொலைசெய்யப்பட்ட கப்டன்கஜன்அவர்களின் ஆக்கமான இச்சிறுகதையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

**அ**வன் பாரிசுக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகி விட்டன. வழக்கம் போல் அன்றும் இரவு வேலை முடிந்து காலை ஐந்து மணிக்கு மெத்ரோவிற்கு வந்தான்! இன்னும் முதல் மெத்ரோ வரவில்லை. யாரையும் காணவில்லை. இரு வயோதிபர்கள் மட்டும் குளிர் போர்வைக்குள்? முடங்கிக் கொண்டிருந்தனர்.

பயணிகள் இருக்கையில் சாய்ந்தபடி சிகரட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான். அப்போது அவன் அருகே படுத்திருந்த முதியவர் ஒருவர் எழுந்து, "தயவு செய்து ஒரு சிகரட் தருவீர்களா?" எனக் கேட்டதற்கு சிகரட்டைக் கொடுத்து விட்டுத்தான் அவரது



முகத்தைப் பார்த்தான்.

முகத்தில் முதுமையின் சாயல் நன்றாகத் தெரிந்தது. நரைத்துச் சடைத்திருந்த தலைமயிரும், தாடியுமாக முகத்தின் முக்கால் பாகத்தை ரோமம் மூடிக்கிடந்தது. கண்களுக்கு மட்டும் கறுப்புக்கண்ணாடி அணிந்திருந்தார்.

எதையுமே பேசாமல் அருகில் இருந்த வயலினை எடுத்து வாசிக்கத் தொடங்கினார். சற்று நேரத்துக்கெல்லாம் பக்கத்தில் படுத்திருந்த ஒருவர் எழுந்து ஏதோ ஏசினான். ஒரு புன்சிரிப்புடன் வயலினைக் கீழே வைத்த முதியவர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

"நீங்கள் எந்த நாட்டவர்?"

"நான் இலங்கை"

"ஓ தமிழனா?......."

"ஆமாம்."

"நீ, ஏன் இங்கே வந்தாய்?"

"நாட்டுப் பிரச்சினை காரணமாக" வந்தேன்.

உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்தது.

அவனுக்கு அந்த முதியவருடன் பேச வேண்டும் போலிருந்தது.

"உன்னுடைய வயது என்ன........?

"எனக்கு 25 வயதுதான் ஆகிறது."

"ஓ நீ, இளம் பையன்தான்! பரவாயில்லை என்ன செய்கின்றாய்?"

அவன் ஒரு கணம் யோசித்தான். "நான் றெஸ்ரோறண்டில் வேலை செய்கின்றேன்."

"தம்பி தப்பாக எண்ணாதே! உங்களது நண்பர்கள் எல்லாம் பயங்கரவாதிகளா? அல்லது விடுதலை வீரர்களா?" திடீரென கிழவர் அந்தக் கேள்வியைக் கேட்டவுடன், அவன் தாமதிக்காமல் பதில் சொன்னான்.

"என்னைப் பொறுத்தவரை விடுதலை வீரர்கள் ஐயா."

"உனக்கு மட்டும் அந்த விடுதலையில் விருப்பம் இல்லையா?"

"ஏன் இல்லை? நான் விடுதலையை விரும்புகின்றேன்!"

"அப்படியானால் நீ, மட்டும் ஏன் தப்பி இங்கே வந்தாய்? உன் நண்பர்களுடன் சேர்ந்து போராடியிருக்கலாம் அல்லவா?"

முதியவர் கேள்வியுடன் சற்று மௌனமானார். அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவனுடைய முகத்தில் யாரோ ஒருவர் ஓங்கி அறைந்தது போல் இருந்தது! *அவரது கேள்வியில் தப்பேதும் இல்லை. உண்மைதான், மற்றவர்கள் இரத்தம் சிந்தி மீட்டுத்தரும் ஒரு சுதந்திரத்தை* *ஓடிப் போனவர்கள் எப்படி அனுபவிப்பது? அவன் தனக்குள்ளேயே குழம்பிக் கொண்டிருந்தான்.*

மௌனமாக இருந்த முதியவர் பேசத் தொடங்கினார்.

"தம்பி, இரண்டாம் உலகப் போரை நீ, பார்த்திருக்க முடியாது. ஆனால் கேள்விப்பட்டிருப்பாய் அல்லவா? நாங்கள் எல்லோருமே, கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதும் ஜேர்மனிக்கு அடிமையாகத்தான் இருந்தது. அப்போது எனக்கு 18 வயதுதான் இருக்கும். நானும் என்போன்ற எல்லா இளைஞர்களும் ஒன்றுகூடி இராணுவப் பயிற்சி பெற்று, பல நாடுகளுடன் நாங்களும் ஒன்று சேர்ந்து தாக்கி ஹிட்லரை அடிபணிய வைத்தோம்! இப்போது நாம் மட்டுமல்ல, இனிவருகின்ற தலைமுறையும் சுதந்திர மாக வாழலாம்! இதைப் பார்க்கும் போதெல்லாம் எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றது தெரியுமா?

ஆனால், அந்த யுத்தத்தில் எனது நண்பர்கள் பலர் பறிபோய்விட்டனர். ஆனால் துயரத்தால் என்றைக்குமே, நான் கவலைப்பட்டது கிடையாது. ஏனெனில், எங்கள் நாட்டு சுதந்திரத்துக்காக எத்தனையோ பேர் தங்கள் உயிரினையே தியாகம் செய்திருக்கின்றனர். அவர்களு டன் ஒப்பிடும் போது நான் சிறு தூசிக்குச் சமன்.

இப்போது கூட இளைஞர்களின் குறும்புகளையும், சிறுவர்களின் கலகலப்புகளையும் பார்க்கும் போதெல்லாம் என் மனது சந்தோசத்தால் நிறைந்து விடும். ஏனெனில், அன்றைய மக்களின் தியாகத்தால் இன்றைய சந்ததி சுதந்திரத்தை அனுபவிக்கின்றது. அன்றையை தியாகத்தின் இலட்சியம், இன்றைய சுதந்திர வாழ்வாகிவிட்டது. அது போகட்டும்! நடந்து முடிந்த கதை!

உனக்கு 25 வயதுதான் ஆகின்றது என்கிறாய். உனக்கு மட்டும் சுதந்திர உணர்ச்சி இல்லையா? நிச்சயமாக இருக்கும். நீ, மட்டும் ஏன் தப்பி ஓடி வந்தாய்?"

கேட்டுவிட்டு அவனைப் பார்த்தார். அவன் எதையுமே பேசாமல் அவரது கண்ணாடியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"தம்பி ஏன் பேசாமல் இருக்கின்றாய்? உனக்கு எவ்வளவு சம்பளம்? எத்தனை மணித்தியாலம் வேலை செய்கின்றாய்?"

"5000 பிராங் சம்பளம். 8 மணித்தியாலம் வேலை செய்கின்றேன்." அவன் சொல்லிவிட்டு மௌனமானான்.

"பார்த்தாயா? நீ, உனது உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைப் பெறுகின்றாயா? இல்லை! அரைமடங்கு கூடப்பெற வில்லை. போராடப் பயந்து பணத்துக்காக இத்தனை வியர்வை சிந்துகின்றாய். உனது நண்பர்கள் விடுதலைக்காக இரத்தத்தையே சிந்துகின்றார்கள். அவர்களுக்கும் உனக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்த்தாயா?"

அவன் யோசித்துக் கொண்டிருந்தான். எதுவுமே பேசவில்லை. மெத்ரோ வரும் சத்தம் கேட்டது.

"சரி சரி மெத்ரோ வருகின்றது, சென்று வா."

அவனுக்கு அவர் விடைகொடுத்து அனுப்பினார்.

அன்று முழுவதும் அவனுக்கு நித்திரை வரவில்லை. அந்த முதியவர் சொன்னதையே மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டிருந்தான்.

"மெத்ரோவில் வயலின் வாசித்து காசு சேர்க்கும் ஒருவனுக்குப் பின்னால் இவ்வளவு தியாகங்களா? அவர் கண்களை இழந்ததைக் கூடக் கவலைப்படவில்லையாமே? எவ்வளவு சுதந்திர உணர்ச்சி இருந்திருக்க வேண்டும்!"

"நீ, இங்கே சுரண்டப்படுகின்றாய்" என்று எவ்வளவு தைரியமாக விளக்கமாகச் சொன்னார். உண்மைதான் பணத்துக்காக ஒரு அறையில் 5 பேர் வசிக்கின்றோம்! குறைந்த ஊதியத்தில் கூடிய நேரம் வேலை செய்கின்றோம். ஆனால், இப்படியெல்லாம் மிச்சம் பிடித்துச் சேர்த்த பணத்தை என்ன செய்யப் போகின்றோம்? அம்மா, அக்கா, சகோதரர்கள்......... ஏன் என் சமூகமே அழிந்த பின் யாருக்கு இந்தப் பணம்? நானே அடிமை! எனது பணம்?

*அவனுக்குக் கிடைத்திருந்த அகதி அந்தஸ்துக் கார்ட்டைப் பார்க்க எரிச்சலாக வந்தது. உயிரோடு இருக்கும் அம்மா, அப்பாவை இராணுவம் கொன்றதாக, தங்கையை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத் தியதாக, தம்பியைத் தேடியதாக........*

*நான் மட்டும் உயிருக்காகத் தப்பி வந்ததாக.......*

*சீ......! என்ன மானம் கெட்ட வாழ்க்கை.* மானமே இல்லாத நாமெல்லாம் மனிதர்களா? மானத்தை இழந்து அம்மணமான எம்மவருக்குத் தந்த கோவணம்தான் இந்தக் கார்ட்டும், விசாவும்.

அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

இப்போது ஒரு மாதமாக அவன் வேலைக்குச் செல்வதில்லை. வேலையை இராஜினாமா செய்து விட்டு இலங்கை செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான்!

"இவனுக்கு ஏதோ பைத்தியம் பிடிச்சிட்டுது" என நண்பர்கள்

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலம்பெயர்ந்து வாழுகின்ற நெஞ்சங்களே நிலைகுலைந்த எம்மினத்தை நினையுங்கள்

புலம்பெயர்ந்து வா்ழுகின்ற பைந்தமிழ் நெஞ்சங்களே
நிலைகுலைந்த எம்மினத்தை நிலைநிறுத்தி நினையுங்கள்
சொந்த மண்ணில் நொந்த எங்கள் பந்தங்களை
சிந்தையிலே சிலநிமிடம் சிரத்தையோடு இருத்திடுங்கள்
வந்தாரை வாழவைத்து வருவோரைக் காத்திருந்த
சொந்தங்கள் இன்று நொந்தங்கு வாழுதையா
பிறந்தஓர் நாடுவிட்டுப் புகுந்த ஓர் வாழ்நிலத்தில்
பறந்து தறிகெட்டுப் பாவியராய்த் திரிகின்றார்
சொந்த மண்ணைப் பிரிந்திட்ட சோகம் உளம்வருத்த
சொந்தமக்கள் துணையின்றி வந்தமக்கள் ஆதரிக்க
சென்றஇடம் தங்குமிடம் ஆகிவிட்ட சோகமதால்
நின்றஇடம் நாளையும் நிலைபெறுமோ என்றதுயர்
நெஞ்சழுத்தும் வேதனையால் நித்தநித்தம் அல்லலுறும்
நொந்து பெற்ற தாயினையும் நோகாது எமைக்காத்த
தந்தையையும் ஒருக்கால் தயவாக நினையுங்கள்
நோய்நொடியால் வாடுகையில் நொந்தநெஞ்சு விம்முகையில்
சேய்அருகில் இல்லையென்று சிந்தைதடு மாறுகின்ற
தாய்நிலத்து உறவுகளைத் தயவாக எண்ணு ங்கள்
கொள்ளிவைக்கப் பெற்றமகன் கப்பலேறிச் சென்றுவிட
அள்ளியூட்ட ஆருமின்றி அவதிபல நோக்கிநிற்கும்
உங்களரும் பெற்றோர்க்கு உணவூட்டும் புனர்வாழ்வுக்
கழகத்தை ஒருக்கால் கருத்தோடு நினையுங்கள்
கொஞ்சுதற்கோர் அன்னையின்றி குலவுதற்கோர் தந்தையின்றி
நெஞ்சத்து ஏக்கங்கள் நிறைந்திட்ட பாலர்கள்
நெஞ்சம் நிமிர்ந்து நல்வாழ்வு வாழ்வதற்கு
கொஞ்சமும் சளைக்காது கருணையுடன் கைகொடுக்கும்
புனர்வாழ்வுக் கழகத்தைப் பலமாக்கி நில்லுங்கள்
போர்மேகம் கலைகின்ற போர்ச்சூழல் அங்கில்லை
கார்மேகம் சுரக்கின்ற கார்காலம் கனிகின்றது
மரவோரம் கடையோரம் மதிலோரம் தெருவோரம்
இரவென்றும் பகலென்றும் இவர்வாழ்வு அமைகின்ற
துயர்நீக்கத் தளராது துணிவோடு செயலாற்றும்
புனர்வாழ்வுக் கழகத்தின் துணையாக அமையுங்கள்
கர்ப்பிணித் தாய்மாரை கண்ணிழந்த கபோதியரை
காலிழந்து கையிழந்து கவலையுறும் எம்மவரை
பள்ளிக்குச் செல்லாது பிச்சைக்காய் அலைகின்ற
பிள்ளைகளை அணைத்தெடுக்கும் கழகத்தை நினையுங்கள்
கூரையற்ற மக்களுக்கு கூரைகளைத் தான்வழங்கி
ஆருமற்ற சிறார்களுக்கு ஆகாரம் தான்வழங்கி
நாதியற்ற முதியோர்க்கு நல்லுதவி தான்புரிந்து
ஆதாரமாக நின்று அனைத்துதவி தான்வழங்கும்
கழகத்தின் சேவைக்குக் காத்திரமாய் உதவுங்கள்
சொல்லில் அடங்காத சோதனைகள் எம்மவரை
எல்லையில்லா வேதனையில் ஆழ்த்திவிடும் வேளையிது
தாய்நிலத்து உறவுகளைத் தூரநின்று நோக்குகின்ற
சேய்உறவே சற்றுநீர் சிந்திக்கும் நேரமிது
காலம் கடத்தாது கருத்துடன்நீர் நிதியளித்தால்
நாளும்பொழுதும் நாம் நம்மவர்க்குத் தணைபுரிவோம்

~ பாலரவி ~


MERRY CHRISTMAS & HAPPY NEW YEAR
என்ற வாழ்த்து மடல்களை வாங்கி விட்டீர்களா?

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரித்தானியாக்கிளை நான்கு வகைப்பட்ட இவ்வாழ்த்து மடல்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றார்கள். இதனால் கிடைக்கும் நிதியனைத்தும் தமிழீழத்திலிடம் பெயர்ந்து கல்வி கற்க வசதியில்லாதிருக்கும் மாணவர்களின் எதிர்காலத்திட்டங்களுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப் படும் இவ்வாழ்த்து மடல்களை வாங்கி உங்கள் அன்புக்குரியவர்களை வாழ்த்தும்போது எமது தமிழீழ மாணவர்களையும் வாழ்த்துகின்றீர்கள் என்று சந்தோசம் அடைவீரகளாக

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்தமிழர் புனர்வாழ்வுக்கழகம்(யூ.கே)
79, Hoe Street Walthamstow London E17 4SA தொலைபேசி இல: 0181 - 520 5876


# மன உறுதி, அதுவே தமிழீழ மக்களின் சக்தி

- ✳ **மலேரியாவுக்கு புதிய சிகிச்சை அறிமுகம்**
- ✳ **வீடற்றவர்களிற்கு 52 புதிய வீடுகள் வழங்கப்பட்டன**
- ✳ **'தாயின் ஆணை' தெருக்கூத்து**
- ✳ **மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்.**
- ✳ **மகளிர் வாரம் அனுஷ்டிப்பு**

தமிழீழ மக்கள், சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் கொடூரமான இனஅழிப்பு முயற்சிகளுக்கு மத்தியில், அதனை கண்டு துவண்டு விடாது, அஞ்சா மன உறுதியுடன் தமது தேசத்தை நிர்மாணிக்கும் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிற்கு உணவு, மருந்து, போன்ற அத்தியாவசிய பொருட்களும், போக்கு வரத்து வசதிகளும், மின்சார வசதிகளும் சிங்கள அரசால் மறுக்கப்பட்ட நிலையிலும் தமது நாளாந்த வாழ்வை மகிழ்ச்சியுள்ளதாக மாற்றத் தம்மாலான எல்லா வழிகளிலும் அவர்கள் முயற்சித்து வருகின்றனர். தமிழீழ மக்களுக்கு மருத்துவ வசதிகள் சிங்கள அரசால் மறுக்கப்பட்ட நிலையில், வன்னி மண்ணில் பரவி வரும் மலேரியா நோயினைத் தீர்க்கும் புதிய மருந்தொன்றினை கிளிநொச்சி ஆயுள்வேதச் சங்கத்தினர் கண்டறிந்துள்ளனர். இயற்கை மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படும் இப்புதிய மருந்துக்கலவையை தினமும் சிறிதளவு அருந்தி வந்தால் மலேரியா நோய் முற்றாகக் குணமாகிவிடும் எனப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் தமிழீழ ஆயுள்வேத வைத்தியர்கள் சங்கத்தினர், இயற்கை மூலிகைகளிலிருந்து சொறிநோய்கள், கரப்பான் நோய்கள் போன்றவற்றுக்கான களிம்பு மருந்துகளையும் கண்டறிந்துள்ளனர். இப்புதிய மூலிகை மருந்துகள் மேலைத்தேய மருந்துகளைவிட மிக வேகமாக நோய்களைக் குணமாக்குவது மட்டுமன்றி, பொதுமக்கள் இவற்றினை மலிவான விலையில் கொள்வனவு செய்யலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது ஊக்குவிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் ஓர் அங்கமாக, வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள மூன்றாம் பிட்டிப் பகுதியில் 52 புதிய வீடுகளை அமைத்து வீடற்றவர்களுக்கு வழங்கியுள்ளது. இந்தப் புதிய குடிமனைகள் கடற்கரும்புலி கொலின்ஸ் நினைவாக அமைக்கப்பட்டுள்ளன. இக் கொலின்ஸ் நினைவுக் குடிமனைகளின் திறப்புவிழாவின் போது, மங்கள விளக்கின் மூன்று சுடர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக வன்னிப் பிரதேச இணைப்பாளர் திரு. ரெஜிசிதா, ஆயுள்வேதசங்கத் தலைவர் திரு.செல்வமகேந்திரன், வைத்திய அத்தியட்சகர் நவரட்ணராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. ராஜா ஏற்றி வைத்தார். கொலின்ஸ் குடியிருப்புக்கள் எனும் பெயர்ப் பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பொறுப்பாளர் திரு. சிதம்பரநாதன் திரைநீக்கம் செய்து வைத்தார். கடற்கரும்புலி மாவீரர். கொலின்ஸ் இன் திருவுருவச்சிலையையும், அணையா விளக்கையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் திரு.சவுந்தர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வன்னிப் பெருநிலம் கூத்துக்கலைகளின் பிறப்பிடமென்பது யாவரும் அறிந்ததே. அந்தப் பழம்கலைப் பெருமைமிகு வன்னி மண்ணில், வன்னி மக்கள், "தாயின் ஆணை" எனும் தெருக்கூத்தினை இரண்டாவது வெற்றி வாரமாக நடாத்தி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் தமிழீழ மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள், மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடாத்தப்பட்டுள்ளன. தமிழீழ காவல்துறையின் பொறுப்பதிகாரி திரு. நடேசன் தலைமையில் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண. பிதா. பிரான்ஸிஸ் ஜோசப், இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டுள்ளார். முல்லை மாவட்டப் பாடசாலைகள் 533 புள்ளிகளையும், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் 341.5 புள்ளிகளையும், மன்னார் மாவட்டப் பாடசாலைகள் 42 புள்ளிகளையும் பெற்று, வெற்றிப் பரிசில்களைத் தட்டிச் சென்றன.

அத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் மகளிர் வாரமும் ஐப்பசி மாதம் 18ம் திகதி தொடக்கம் பத்து நாட்களுக்கு அனுட்டிக்கப்பட்டது. தமிழீழப் பெண்கள் மத்தியில் விடுதலைப் போராட்டம் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட மகளிர் வாரமானது தமிழீழ பெண்கள் மத்தியில் விடுதலை போராட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறாக சிங்கள இனவாத அரசின் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் – தளராத மன உறுதியுடன் தமிழீழ தேச நிர்மாண பணிகளில் தமிழீழ மக்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ✳

www.tamilarangam.net



## மீசையில் மண்பட்டது ஆனால் விழவில்லையாம்

அடியைக் கொடுத்து பொல்தூக்க வைத்த சிங்கள அரசு, பின் அடி வாங்கிப் பொல்லைக் கொடுத்து, தற்போது பொல்லைக் கொடுத்ததால் அடி வாங்குகின்றது. இது ஓர் விடுகதையல்ல – விடுதலைப் புலிகள் உருவான கதை. இல்லையில்லை – புலிகளால் உருவாக்கப்பட்ட கதை இது.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் சிங்களத்தின் கைகளிற்குச் சென்றது – அவர்களுக்கு அதிஸ்டவசமானது. இது ஆங்கிலேயரால் உண்டானது. அந்த அதிஸ்டத்தின் அனுசரணையோடு சிங்களம் தனது ஆசைகளை அரங்கேற்ற எண்ணியது.

தமிழர்களை அடக்கி, அடிமை கொண்டு, அனாதரவாக்கி அவர்கள் தம் நிலத்தினைச் சிங்களத்தின் ஏகபோக உடமையாக்கி, 'இலங்கை சிங்களவரின் நாடு' எனும் நிலையை அடைவது அவர்களின் இலக்காக இருந்தது. அதற்காக, நடந்த அடக்குமுறைகளும், உரிமை மறுப்புகளும், இனஅழிப்புகளும் பழைய கதை. ஆனால், அதுவே தமிழரை ஆயுதம் தூக்க வேண்டிய அவசியத்தை ஆழமாக உணர்த்தியதோடு ஆயுதத்தின்பால் நம்பிக்கை கொள்ளவும் செய்தது. அவ்வாறான நம்பிக்கையின் பரிணாமமே ஆயுதப் போராட்டமாக வலுப்பெற்று விடுதலைப் புலிகளாக விஸ்தீரணம் கண்டது.

தமிழரின் பாதுகாப்பிற்கு, அவர்களின் இருப்பிற்கு, ஆயுதத்தால் அரண் செய்யத் துணிந்த புலிகள், எதிரியிடமிருந்தே ஆயுதத்தை அடித்துப் பறித்துத் தம் பலத்தை வளர்த்துக் கொள்ளும் தந்திரத்தைக் கைக்கொண்டனர். இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் செம்மையாக நடைமுறைப்படுத்தியிருந்தார்.

இன்றோ, எடுத்த ஆயுதங்களைக் கொண்டு எதிரியைக் கொன்று பெரும் படைக்கல சக்தியை புலிகள் பெற்றுக் கொள்ளும் போர் வியூகத்தை தேசியத் தலைவர் நடைமுறைப்படுத்துவது, புலிகள் நடாத்திய சமர்களில் தெளிவாகத் தெரியும் ஒன்று.

இதற்கு இன்றைய அரசு 'ஜயசிக்குறுய்' – (வெற்றி உறுதி) எனும் பெயரில் நல்ல கடை விரித்துக் கொடுத்திருக்கிறது என்றே தெரிகிறது.

முல்லையில் கொடுத்த 'ஆட்டிலறியால் அடிவாங்கிய தாண்டிக்குளம் – பெரியமடுவில் புலிகள் புகுந்து செய்த சமரால்பெரும் படைக்கல சக்தியை இழந்ததோடு, போர் வீரர்களையும் இழந்து படையை விட்டு ஓடியவர்களைத் தேடிப்பிடிக்கும் நிலைக்கும் உள்ளாக்கி இருக்கிறது 'ஜயசிக்குறுய்'.

இது போதாதென்று 'இன்ரபோல்' உதவியை, ஓடிய படைகளைத் தேடிப் பிடிக்க நாடி இருக்கிறது சிங்கள அரசு. இந்நிலையிலும் போலி வீறாப்போடு 'ஜயசிக்குறுய்' தொடருமென்று அடுத்தடுத்து அரசின் அறிவிப்புக்கள் வேறு.

தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பதியும் இந்தப் போர்க் களத்தில், விடுதலைப் புலிகள் சாதிக்கும் இன்னுமொரு கட்டம் எஞ்சியுள்ளது. அது "அரசின் இராணுவம் அடி வாங்காமல் பொல்லைக் கொடுப்பது". விரைவில் அது நடக்குமென்றே நம்புவோம். *

## பைத்தியம்.....
### (சிறுகதை)

எல்லோரும் பேசிக்கொண்டனர். ஆனால், அவனைப் பொறுத்த வரை இப்போதுதான் பைத்தியம் தெளிந்துள்ளது! இது அவர்களுக்குப் புரியாது. ஏனெனில், அவர்கள் இன்னும் பைத்தியக் காரர்கள்தான்.

இன்று மாலை பயணம். எப்படியும் அந்த முதியவரைச் சந்தித்து விட வேண்டும் என அந்த மெத்ரோவுக்குச் சென்றான். அங்கே அவரைக் காண வில்லை!

சிகரட் கடைப்பக்கமாக வெளியே வந்த போது தெருவில் சனக்கூட்டம் தென்பட்டது. சனத்தை விலக்கிப் பார்த்த போது, ஒரு கையில் வயலினையும் மறு கையில் ஊன்று கோலையும் பிடித்தபடி சிவத்த பெஞ்சின் மேல் அவரது உடல் மட்டும் கிடந்தது.

முகத்தில் மாறாத அந்தப் புன்முறுவல். ஆனால் அந்தக் கண்களை மூடிக்கொண்டிருந்த கண்ணாடி மட்டும் சற்றுத் தூரத்தில் விழுந்து கிடந்தது.

அவனுக்கு ஒரு கணம் திக்கென்றது! தனது பைத்தியத்தைத் தெளிய வைத்த வயோதிபரைக் காண முடியவில்லை என்ற ஏக்கம். கண்கள் கலங்குவது போல் இருந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்!

அதோ விமானம் மெல்ல மெல்ல முகிலினுள் மறையத் தொடங்கியது. இனி ஒரே சீராக ஓடத் தொடங்கும்.

"விசர் பெடியன். சொல்லச் சொல்லக் கேட்காமல் வெளிக்கிட்டுப் போறான். நாட்டிலை என்ன நடக்குதெண்டு தெரியாது. காட் கூட கிடைச்சிருக்கு! வாழத் தெரியாதவன்!" அவனை வழியனுப்ப வந்தவர்கள் அவன் விமானத்தில் சென்ற பின் விமான நிலையத்தில் இப்படிப் பேசிக் கொண்டனர். அவர்களது அனுதாபம் அவனுக்காக அல்ல. ஒரு 'கார்ட்' அநியாயமாகப் போகிறதே என்பதே.........!

அவர்களுடைய அனுதாபம் அவனுக்காக அல்ல. ஒரு கார்ட் அநியாயமாக்கப் படுகின்றதே என்பதற்காக!!. *

## யேர்மனி அயன்பேர்க் நகரில் புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யேர்மன் கிளையினர் ஆண்டு தோறும் நடாத்திவரும் புனர்வாழ்வுக் கலைத்தென்றலில் 1997ஆம் ஆண்டின் அயன்பேர்க் நகருக்கான கலைநிகழ்ச்சி 11–10–97 அன்று 'றைனீசகோப்' மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழத்தில் மண்மீட்புப் போரில் விதையான வீரர்களுக்காகவும் சிங்கள இனவாதக் கொடுமைக்குப் பலியான மக்களுக்காகவும் அமைதி வணக்கம் செய்து, நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. கனோபர் நகரத் தமிழாலயத்தைச் சேர்ந்த, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் நடன ஆசிரியை பவித்திரா செல்வகாந்தன் அவர்களின் மாணவிகள், 'மாவீரர் புகழ் பாடுவோம்' என்னும் பாடலுக்கு நடனமாடினர். அதனையடுத்து, கலை, பண்பாட்டுக் கழக நடன ஆசிரியை சாவித்திரி இம்மானுவேல் அவர்களின் மாணவிகள், 'விடுதலை வேள்வி ஒன்றை' என்ற பாடலுக்கு நடனமாடினர். தொடர்ந்து, பல நடனங்களை விடுதலை உணர்வோடு தந்து மக்கள் மனதில் இடம் பிடித்தனர் நடனக் கலைஞர்கள்.

சல்ஸ்கிற்றார் நகரத் தமிழாலய மாணவனின் பேச்சும், பட்சக்சா நகரத் தமிழாலய மாணவர்களின் பாடலும், கவிதையும், பிஞ்சுகள் கூட ஆர்வத்துடன் தமிழ் பயிலும் யதார்த்தத்தை விளக்கியது.

சல்ஸ்கிற்றார் – சீசன் நகரங்களின் தமிழாலயங்கள் சேர்ந்து வழங்கிய இசை நிகழ்ச்சி, சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்த ஒரு நல்ல முயற்சி எனப் பலராலும் பாராட்டப்பட்டது.

உலகத் தமிழினமே எண்ணிப்பார் என்ற பாடல், காட்சியும் கானமுமாக பாட்கண்ட்சைம் நகரக் கலைஞர்களால் நடிக்கப் பட்டது.

தமிழீழத்தில் துயருறும் மக்களின் கண்ணீரைத் துடைக்கும் நிதி நிகழ்ச்சியான இந்த நிகழ்ச்சிக்கு 'பாச இசைமழை' எனப் பெயரிட்டு, இசை வழங்கும் 'தமிழீழம்' இசைக் குழுவின் இசைமழையில் நனைந்த அனைவரும், உணர்வு பொங்கும் தமிழீழ விடுதலைப் பாடல்களால் கவரப்பட்டு அமைதிகாத்து ரசித்தனர்.

கலை, பண்பாட்டுக் கழகத்தின் துணைப் பொறுப்பாளர் திரு. கண்ணன் அவர்களின் இசை அமைப்பிலும் கலை, பண்பாட்டுக் கழக நடன ஆசிரியை சாவித்திரி இம்மானுவேல் அவர்களின் நடன வடிவமைப்பிலும் உருவான 'விலங்கை உடைத்த விலங்கு' என்னும் இசை நடனம், பல உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்தது. விடுதலை, விலங்குகளுக்குக்கூட தேவையான அடிப்படை விதி என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது. பலரும் பாராட்டும் ஒரு தரமான கலைப்படைப்பாக, அந்த இசைநடனம், பார்வையாளர்களாக வருகை தந்திருந்த மக்களால் விமர்சித்துப் பேசப்பட்டது. கலை, பண்பாட்டுக் கழகத்தின் அறிவிப்பாளர் யேசுதாசன்

நிகழ்சிகளைத் தொகுத்து வழங்கினார். *

## அவுஸ்திரேலியாவில் தியாகி திலீபன் பத்தாவது ஆண்டு நினைவுநாள்

திலீபனின் 10வது ஆண்டு நினைவாஞ்சலி நிகழ்ச்சி 21–09–97 அன்று 'கோம்புஸ்' ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னி கிளையினரால் நடாத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உணர்வுபூர்வமாக தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னிக் கிளைப் பொறுப்பாளர் திரு. பா. சிறீபாலன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றியதைத் தொடர்ந்து, மாவீரன் அருச்சனாவின் அன்னை திருமதி பொன்னுத்துரை தீபமேற்றினார். நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் தியாகி தீலிபனின் உருவப்படத்திற்கு மலராஞ்சலி செலுத்தினர்.

மாவீரன் அருச்சனாவின் தந்தையார் திரு. பொன்னுத்துரை அவர்கள் உரையாற்றினார். சிறுவர்களுக்கான பேச்சுப்போட்டி மூன்று பிரிவுகளாக இடம் பெற்றது. தொடர்ந்து, திரு. மருதநாயகம் அவர்கள் கவிதை வாசித்தார். அதன் பின்பு 'தியாகப் பயணம்' என்னும் நாடகம் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி பொன்னுத்துரை அவர்கள் திலீபன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயங்களை வழங்கினார். சிட்னிக் கிளைப்பொறுப்பாளர் தேசியக் கொடியை இறக்கி வைத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. *

## இத்தாலி - பலெர்மோவில் தியாகதீபம் திலீபன் பத்தாண்டு நினைவுநாள்

மக்களுக்கு நீதி கிடைக்க தன் உடலையே வருத்தி பன்னிரு நாட்கள் சாகும்வரை உண்ணா நோன்பிருந்து வீரகாவியம் படைத்த தியாகச் செம்மல் லெப். கேணல் திலீபனின் பத்தாம் ஆண்டு நினைவுநாள் இத்தாலி பலெர்மோ நகரில் நடைபெற்றது. 28–9–97 அன்று மாலை 5 மணியளவில் தீபச்சுடர் ஏற்றப்பட்டு, அமைதி வணக்கத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.

தியாகி திலீபனின் ஈகம் பற்றியும், அவர் காட்டிய வழியில் நாம் செய்யவேண்டிய எமது தாயகக் கடமை குறித்தும், 'திலீபன் கல்வி நிலைய' மாணவி செல்வி பிரியா அவர்கள் தனது பேச்சில் தெளிவுபடுத்தி இருந்தார்.

பக்தியை மலர்களாக அர்ச்சித்த 'மலர்வணக்க' நிகழ்வை எம் இதயவீரனுக்கு அர்பணித்துச் சென்றனர் திலீபன் கல்வி நிலைய மாணவிகள். தொடர்ந்து, ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து மேடையேற்றிய 'தீர்க்கதரிசி திலீபன்' என்ற இசை அபிநயம் இடம் பெற்றது. "முல்லைத் தீவுகள்.....தொடரும்" என்ற பாடலுக்கு தமிழீழக் கிராமிய நடனங்களில் ஒன்றான குதிரை ஆட்டம் அடுத்து இடம்பெற்றது. மீண்டும் திலீபன் கல்வி நிலைய சிறார்கள் வழங்கிய 'தாய்மொழி' எனும் தாளலயம் தாய்மொழியின் அவசியம் பற்றி கூறிச் சென்றது.

அடுத்து, "தென்தமிழ் ஈழமும் எங்களின் கையிலே" என்ற தமிழீழ எழுச்சிப் பாடலுக்கான இசை அசைவை தமிழர் கலை, பண்பாட்டுக் கழகக் கலைஞர்கள் வழங்கினர்.

அடுத்து நடைபெற்ற, 'சிரிப்பினால் சிந்திப்போம்' என்ற ஓரங்க நாடக நிகழ்வு பலெர்மோ மக்களின் வாழ்க்கை முறையில் சீர்திருத்த வேண்டிய சில கருத்துக்களை எடுத்துக் காட்டியது.

இடைவேளையின்போது, தமிழீழ விளையாட்டுத் துறையால் நடாத்தப்பட்ட 1997ஆம் ஆண்டுக்கான மாவீரர் உதைபந்தாட்ட போட்டிக்கான வெற்றிக் கிண்ணமும் ஏனைய விளையாட்டுப் போட்டிகளுக்கான கிண்ணங்களும் வழங்கப்பட்டன. இறுதிக் கலை நிகழ்வாக, "தொலைநோக்கிய கரிகாலன்" நாடகம் அரங்கேறியது. மகிந்தனின் வருகையில் இருந்து 'ஜெயசிக்குறு' வரையான சிங்களப் பேரினவாதிகளின் உண்மை முகம் வெளிக்காட்டப்பட்ட நிகழ்வாக அது அமைந்தது.

இந்நிகழ்விற்கு கத்தானியா நகரில் இருந்தும் தமிழ் மக்கள் வருகை தந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## ஒன்பதாய் எழுவோம்

கண்ணாடி போட்டவரே-எம்மண்ணை
காதலித்த சீலரகளே!
சிங்களத்தின் இனவாதம் – இன்று
'லாச்சப்பல்'வரை வந்ததினால்....
உம்மை நாம் இழந்தோம்!
"ஒன்று விழ நாம் ஒன்பதாய் எழுவோம்"
கவிஞரின் கவிதையடி நெஞ்சில் தைத்திட
நிமிர்ந்து நாம் எழுகின்றோம்.

–துரை சிலபாலன்(தீவகன்), இத்தாலி.

## நாதனும் கஜனும்

நாதனும் கஜனும் நல்ல போராளிகள்
வேர்வை கசிய உழைத்திட்ட வேங்கைகள்.
பாரிசின் வீதியிலே யார் உமைக்கொன்றது
பாரினிலே உம் சேவை பாதியில் நின்றது
நீதியோடு உண்மையாய் ஈழமுரசு வந்தது
நிதிதிரட்டியே தேய்ந்த கால்களேன் சாய்ந்தது
பறந்து திரிந்த எங்கள் கிளிகளே! நீவிர்
இறந்த செய்திகேட்டு அழுதது எம்விழிகளே!

–புங்கையூர் த. மதி



## விடியலைத் தேடிய வேங்கைகள்

விடியலைத்தேடிய நாதன் கஜன்
வேங்கைகள் இருவரையும்
அடிவானம் சிவக்கமுன்–அந்த
அரக்கர்கள் கொன்றதால்
இடி விழுந்தது எம் நெஞ்சில்
இப்படியும் நடந்ததோ என்று.
தடைகள் பல வந்தாலுமென்ன–நாம்
தமிழீழத்தை மீட்போம் உறுதி!

–யோ. றட்ணகுமார்(மணற்காடு),
இத்தாலி.

## விரைவில் வருவீர்

தாயக மண்ணைக் காக்க
கானகம் சென்றவரில்லை
பயக்கமிகு 'தளத்தினில் நின்றுழைத்தீர்
சுகமது தேடும் உலகில்
அகமதில் தமிழை வைத்தீர்
விதைத்தனர் முளைக்க அங்கே
பதியமே வைத்தோம் உம்மை
விரைவில் தேவையிங்கே!

–தரும நளினி, யேர்மனி.

## வென்றிட விதைத்தவை

இருவிதைபோட்டு ஓராண்டாயிற்று
எழுதுகோல்கொண்டு இதயத்தைத்துளைத்து
வீரமும் இனப்பற்றும் தந்தது ஒன்று.
ககனம் கடந்து, கனகம் அள்ளும்
காவியப் போருக்கு கருவியாம் மற்றொன்று.
விதைத்தவை முளைத்திற்று பலநூறாய் பெருகிற்று
சிதைத்த பகைவனை தொலைத்திடும் பாரடா
சுதந்திர நிலமதை வென்றிடும் தமிழடா.

– அமலா ஜெயந்தன்.

## மனங்களில் நிலைத்தவர்

இறந்துவிட்டீர்களா நீங்கள்?
இல்லவே இல்லை
எங்கள் மனங்களில்
நிலைத்தவர் நீங்கள்!
சுட்டதால் நீங்கள் செத்தீர் என்றும்
போராட்டப்பாதை பிறழ்ந்திடுமென்றும்
சுட்டவன் நினைத்தால் செத்தவன் அவனே!
சிந்தனை அற்ற நடைப்பிணம் அவனே!

–பூபதி, யேர்மனி.

## உங்களைப் பூஜிப்போம்!

கடல் கடந்தும் தலைவன்
வழி நடந்தவர்– நீங்கள்
கஜனென்றும் நாதனென்றும்
எமக்கு உரைத்தனர்.
மாற்றான் உம் மேனிகளை
அழித்திட்ட போதும் தமிழ்
மறவர் மறப்போமா? மனதில்
உங்களைப் பூஜிப்போம்.

–அ. றாபேட்(மணல்காடு), இத்தாலி.

## ஆக்கங்கள் அனுப்பியோர்

ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

ஜேர்மனி – பூ. சுபாங்கி, நடா, செல்வி. பொன்னுத்துரை சுபாசினி, க. சிவகுமார், ந. உதயகுமார், திருநெல்வேலிச் சிவகுமார்.
இத்தாலி–எ. டெமன் வோல்ட், அ. எ. றெஜினோல்ட்.
பிரான்ஸ் – திருமதி ஆனந்தன் ஈஸ்வரி.
சுவிஸ் – மலரவன், ஜோசவ் பெலிசிற்றஸ்.
சேர்ஜி செந்தமிழர்.

## அணையா விளக்குகள்

எம்மினத்தின் அவலம் தீர்க்க
ஊன், உறக்கம் மறந்து
பொழுதெல்லாம் புலமெங்கும்
ஓயாதுழைத்த நம் செல்வங்களே!
அணையா விளக்குகள் – என்றும்
தீயில் தீயாத சுடர்கள்
நீங்கள் இறந்தாலும்
உங்கள் சேவைகள் இறவாது தொடரும்

–தசாம், பிரான்ஸ்.

## உணர்வுள்ளவரை....

சமராடும் திறன் இழந்த
சந்திரிகாவின் கையாலாகாத்தனம்
சாய்க்க முடிந்தது–உங்கள்
சரீரத்தை தானே!
வேரோடிய அறுகாக நீவிர்–
விளைந்த தமிழ்மான உணர்வுகளை
வெட்டி சாய்க்கவோ முடியும்?
உணர்வுள்ளவரை நினைவிலிருப்பீர்!

– வல்வை கித்துள்.

## நேரிடை மோதிடார்

விடுதலைக் காற்றென புறப்பட்ட
வீரரை
நேரிடை மோதிட துணிவற்ற சிங்களம்
பாதகர் துணைகொண்டு
பாதகம் புரிந்தது பாரிஸில்.
உயிர் கொல்லும் குண்டுகள்
உடல் தனைத் துளைக்கினும்
உதிருமோ தமிழர்தம் உணர்வுகள்?

– ரஞ்சித், லண்டன்.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 05- 12 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# தமிழீழம் என்றே.....!

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



# வரலாற்றுப் புகழுடைய தேச இனங்கள் ........

பிரச்சினையின் உண்மைத் தனத்தை நம்புகிறேன்" என்று கூறிய செய்தி, ஸ்கொட்லாந்து மக்கள் தமிழீழத்தவர்களின் உணர்வு பூர்வமாக உள்ள வெளிப் பாட்டை இனங் கண்டமைக்கு ஒரு சிறு சான்றாக விளங்கியது.

உங்கள் துன்பங்கள் தீர உடன் என்ன செய்யப்பட வேண்டும் என ஒரு ஸ்கொட்லாந்து குடிமகன் ஒருவர் கேட்டதற்கு, ஒரு தமிழீழ வயோதிபர் கூறிய சுருக்கமான பதில் "உடனடியாக எங்கள் துன்பங்களுக்கு



ஊற்றான சிறிலங்காப் படைகள் விலக வேண்டும் அடுத்ததாக, எங்கள் பிள்ளைகளான விடுதலைப் புலிகளை ஏற்று அவர்களுடன் சேர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்" என்பதாகும். இந்த இரண்டு வரிகளில் அவர் இன்றைய சிக்கல் நிலைக்கான தீர்வுக்கான பாதையினை அகலத் திறந்து வைத்ததை பார்த்த அந்த ஸ்கொட்லாந்து வாசி, "இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்க, தொடர்ந்து அந்த வயோதிபர், "பிரித்தானிய அரசிடம் இதற்கான அழுத்தங்களை சிறிலங்கா அரசிடம் ஏற்படுத்தும்படி குரல் கொடுங்கள். எங்கள் பிள்ளைகளுக்கு உணவு, மருந்து



கல்வி வசதி எதுவுமே இல்லாமல் தவிக்கிறார்கள். இவை போர் ஆயுதமாக சிறிலங்காவால் கையாளப் படுகிறது" என்றார். இந்த உரையாடலை மேலும் கேட்க முடியாமல் ஊர்வலத்துக்கு முன்னே செல்லும்படி ஸ்கொட்லாந்து காவற்துறையினர் கேட்டதை அடுத்து முன் வரிசைக்கு நகர வேண்டியதாயிற்று. ஊர்வலம், புகழ்பெற்ற ஸ்கொட்லாந்து வங்கிகள், தேவாலயங்களைத் தாண்டி பிரதான பாதைகளூடாக சென்று திறந்தவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழீழக் கூடாரத்தை சென்றடைந்தது.

## இரு தேசியக் கொடிகளும் ஏற்றப்பட்டன

தமிழீழக் கூடாரத்துக்கு வெளியே ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு. டென்னிஸ் கனவன் ஏற்றி வைத்த ஸ்கொட்லாந்து தேசியக் கொடி காற்றில் பட்டொளி வீசிப் பறந்து தமிழீழ மக்களை வரவேற்றது. தமிழீழத் தேசியக் கொடியினை ஸ்கொட்லாந்து தேசியக் கொடிக்கு அருகிலிருந்த இணைக் கம்பத்தில், நாதஸ்வர கானமழை முழங்க, மக்கள் கரவொலி அதிர, தமிழீழம் வாழ்க என மக்கள் நெஞ்சமெல்லாம் வாழ்த்த மூத்த பத்திரிகையாளரும், 'கொட்ஸ் பிரிங்' எனும் ஆங்கில திங்கள் இதழின் ஆசிரியரும், தமிழீழத் தேச விடுதலை மீட்புக்காக பல இடர்களை எதிர்கொண்டவருமான திரு. சிவநாயகம் அவர்கள் ஏற்றிவைத்தார்.

"ஏறுது பார் கொடி" எனும் தமிழீழக் கொடிப் பாடல் நாதஸ்வரத்தில் இசைக்கப்பட மக்கள் தேச வணக்கம் செய்தனர்.

## பொதுநலவாய எடின்பரோ 97க்கான குடும்பக்கலைவிழாவில் தமிழீழ மக்கள்

பழங்கலைகளின் பிறப்பிடமென இலக்கிய இசை உலகுகள் போற்றும் ஸ்கொட்லாந்து மண்ணில் பொதுநலவாய எடின்பரோ 97க்கான குடும்பக் கலைவிழா திறந்த வெளிக்கலையரங்கமான ரோஸ் அரங்கில் சிறப்பாக இடம்பெற்றது. இக் குடும்பக் கலைவிழாவில் தமிழீழ மக்களின் பங்களிப்பாக வீணை இசையும் நடனமும் காவடியாட்டமும் இடம்பெற்றன.

இளம் பெண்கள் சிவப்பு, மஞ்சள் நிறச்சேலை அணிந்து தமிழீழ சமகால வரலாற்றை கதையாகக் கூறி அபிநய நடனம் செய்து மக்களைக் கவர்ந்தனர். "போரம்மா" என்ற தமிழீழ எழுச்சிக் கானத்துக்கே இவ் இளம்பெண்கள் மிகச் சிறப்பாக நடனமாடி அங்கு கூடியிருந்த பன்நாட்டு மக்கள் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டனர். இதே மேடையில் எட்டு தமிழீழ இளைஞர்கள் காவடி ஏந்தி காவடி நடனம் செய்து தமிழீழக் கலைப் பெருமையை ஸ்கொட்லாந்து மக்களுக்கு வெளிப்படுத்தினர். தமிழீழக் கலைஞர்கள் இருவரது வீணைக் கச்சேரியும், இருவரது வயலின் இசையும் இருவரது மிருதங்க வாசிப்பும் இடம்பெற்று இசைத்தமிழ் இன்பத்தைப் பெருக்கியது.

பொதுநலவாய அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது பாரம்பரிய கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட நேரஅட்டவணையில் பி.ப 4 மணி தொடக்கம் 4.40 மணி வரையிலான நேரம் இத்தகைய தமிழீழ கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவமானது, பொதுநலவாய அமைப்பில் தமிழீழ தேசத்தையும் மறைமுகமாக அங்கீகரித்தமைக்கு ஒப்பானதாகக் காணப்பட்டது.

அத்துடன் இந்த தமிழர் இன அடையாளத்தை தெளிவுபடுத்தும் வகையில் இசைநிகழ்ச்சிகள் தமிழீழக் கூடாரத்துள்ளும் இடம்பெற்றது. காதலும் வீரமும் சங்க காலத் தமிழர் வாழ்வின் இருவிழிகள். இவற்றை வெளிப்படுத்தும் வகையில் தமிழீழக்கூடார கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன. தமிழீழ சிற்றுண்டி வகைகள் ஸ்கொட்லாந்து பார்வையாளர்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் வழங்கப்பட்டது. சூடான தேநீரும் பரிமாறப்பட்டது.

## பொதுநலவாய மாநாட்டில் சந்திரிகாவின் முகமூடி கிழிந்தது

பொதுநலவாய நாட்டுத் தலைவர்களின மாநாட்டில் சந்திரிகா அரசின் ஜனநாயக முகமூடியைக் கிழித்தெறியும் அரும்பணியில் தமிழீழ மக்கள் பெரும் ஆர்வம் காட்டினர். ஆயினும் நூறு பேருக்கு மட்டுமே மாநாட்டு முன்றலில் அமைதிப் போராட்டம் நடாத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தினால் நூறு பேரை மட்டும் அங்கு செல்லும்படி நிர்வாகிகள் கேட்டுக் கொண்டனர். தமிழ் மக்களின் ஆர்வமிகுதியால் 100 பேருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நூற்றியிருபது பேர் நெருங்கி நின்று விழிப்புப் போராட்டத்தை



ஆரம்பத்தினர். சுலோக அட்டைகளைத் தாங்கி அமைதியாக நின்ற மக்கள், மாநாட்டு மண்டபவத்திற்கு செல்வதற்காக ஜனாதிபதி சந்திரிகாவை ஏற்றிவந்த சிங்கக்கொடி தாங்கிய அரச வாகனத்தை கண்டதும் உணர்ச்சி குமுறலினால் "சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவே தமிழீழ மக்களை கொல்லாதே". "எங்கள் தலைவர் பிரபாகரன்" என மக்கள் உரத்த குரல் எழுப்பினர். இவ்வேளையில் உள்ளே மாநாட்டு மண்டபத்தில் அனைத்துப் பொதுநலவாய நாட்டுத் தலைவர்களும் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ மக்களின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கண்ட பாதுகாப்புப் பிரிவினர்,



சிறிலங்காவின் அச்சுறுத்தல்களால் ஏற்படுத்தியிருந்த மேலதிக பாதுகாவல் ஒழுங்குகளை இடைநிறுத்தி சாதாரண பாதுகாப்பையே வழங்கினர்.

## சிறிலங்காவில் மனித உரிமையும் ஜனநாயக ஆட்சியும்

"சிறிலங்காவில் மனித உரிமையும் ஜனநாயக ஆட்சியும்" என்ற தலைப்பிலான மாநாடு ஒன்று அன்றைய தினம் தமிழர்களின் மனித உரிமை மையத்தினால் நடாத்தப்பட்டது. சர்வதேச தமிழர் சம்மேளனத் தலைவர் திரு. கே. கரன் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில், தமிழர் மனித உரிமைக்கான மையத்தின் இணைப்பாளர் செல்வி மான், தமிழர் வைத்திய சம்மேளனத்தின் சார்பில் மருத்துவர் இரட்னேஸ்வரன், 'தமிழ் கார்டியன்' பத்திரிகை ஆசிரியரும் முன்னாள் ரூபவாகினி கூட்டுத்தாபனத் தலைவருமான வசந்தராஜா, மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்துவரும் டியற்றி மக்கொனல் ஆகியோர் மாநாட்டு விளக்கமளிக்கும் குழுவில் அங்கம் வகித்தனர்.

பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு கன்சென் கியூசி, உதவித் தலைவர் செல்வி பி. கியூ ஆகியோர் உட்பட பல சர்வதேசப் பிரமுகர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களும் ஸ்கொட் லாந்து மக்களும் இதில் கலந்து கொண்டனர்.

பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தனது உரையில், அரசுகளின் மனித உரிமை வன்முறைகளை கண்டித்து ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு பொது நலவாய நாடுகளின் ஒன்றியத் துக்கு உண்டு எனக் கூறினார். அத்துடன் 'கரே' மனித உரிமை பிரகடனத்தை கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பு அரசுகளுக்கு உண்டு எனக் கூறிய அவர், சிறிலங்காவின் மனித உரிமை வன்முறைகளைக் குறிப்பிட்டு உரை நிகழ்த்தினார். தமிழ்ச் சட்டத்தரணிகள் சார்பில் சட்டத்தரணி பரம் அவர்கள் உரை நிகழ்த்தினர்.

பிற்பகல் சுமார் 4.45 மணியளவில் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவடைந்து, ஸ்கொட்லாந்து மக்களுக்கு எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும் அவசியத்தையும் விளக்கிய மனநிறைவுடன் மக்கள் தொடரூந்து நிலையத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வரலாற்றுப் புகழுடைய தேச இனங்கள் இரண்டை நேச உறவாட வைத்த பொதுநலவாய மாநாடு




இயற்கை எழில்கொஞ்சும் ஸ்கொட்லாந்து தேசத்தின் வர்த்தகத் தலைநகர் எனப் புகழ் கொண்ட எடின்பரோவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு, தமிழீழ மக்களின் துன்பங்களையும் விடுதலையின் அவசியத்தையும் உலகுக்கு எடுத்துரைக்கும் அரிய சந்தர்ப்பத்தை பிரித்தானியா வாழ் தமிழர்களுக்கு அளித்தது.

## தமிழீழ உணர்வோடு ஸ்கொட்லாந்து தேச யாத்திரை

1997 அக்டோபர் 25ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆறுமணிக்கு முன்பதாகவே லண்டன் கிங்ஸ்குறஸ் தொடரூந்து நிலையத்தில் தமிழீழ மக்கள் ஸ்கொட்லாந்து பயணத்திற்காக ஒன்றுகூடத் தொடங்



கினர். லண்டனின் பல பாகங்களிலிருந்தும் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் சிறுவர்களையும் கூட கூட்டி வந்த தமிழீழ மக்களின் தேச நேசம், அவர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தேச விடுதலை மேல் கொண்ட உறுதியை வெளிப்படுத்தியது. தாய்மார்கள், இளைஞர்கள், யுவதிகள், வயதானவர்கள் என பலதரப்பட்டவர்களும் ஒருங்குதிரண்டு வந்திருந்தனர். சரியாக காலை 7.10 மணிக்கு தமிழீழ உணர்வோடு ஸ்கொட்லாந்திற்கு புறப்பட்ட அறுநூறு தமிழீழ தேச மக்களுடன் தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு தொடரூந்து எடின்பரோ நோக்கிப் புறப்பட்டது. காலை 7.25க்கு பொட்டர்ஸ்பார் நிலையத்தில் மேலும் நூறு தமிழீழ மக்கள் தொடரூந்து வண்டியில் ஏறி இணைந்து கொண்டனர். தொடரூந்து வண்டியின் உள்ளே தமிழீழ எழுச்சிக் கீதங்கள் தவழ்ந்தன. மக்களின் பேச்சுக்களில் சந்திரிகா அரசு சமாதானத்திற்கான போர் என்ற குறிமீட்டுடனும் பாதை திறப்புக்கான போர் என்ற பெயருடனும் நடத்திய – நடத்தும் தமிழீழத்தின் மீதான போர் ஏற்படுத்தும் அழிவுகளைப் பற்றிச் செய்திகளை மக்கள் தமக்கிடையே உரையாடிக் கொண்டிருந்தனர். இவற்றிக்கெல்லாம் விடுதலைப் புலி வீரர்கள் முடிவுகாண்பார்கள் என்று கூறி மகிழவும் செய்தனர்.

மக்களின் நலன்களைக் கவனிக்கும் பணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையின் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். மக்களுக்கு காலை உணவும் பின்னர் மதிய உணவும் வழங்கப்பட்டன. பயணத்தில் ஈடுபட்ட சகல தமிழ் மக்களும், தமிழீழத் தேசிய உணர்வுடன் சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக ஏகோபித்த முறையில் தமது எதிர்ப்பை தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான தேச விடுதலைப் போராட்டத்துக்கு விருப்பை ஆதரவை தெரிவித்தமை சந்திரிகா அரசின் பல உண்மைக்கு மாறான பிரச்சாரங்களின் போலித்தனத்தை அம்பலமாக்கியது.

தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு நாட்காட்டியும், தமிழீழத்தின் புதிய புரட்சிப் பெண்கள், தமிழீழ தேசம் , தமிழர்களின் கலாச்சாரம் உலக வரலாற்றுப் பொக்கிசம், தமிழீழம் மீதான ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருக என்ற தலைப்பிட்ட துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு கொடுக்கப்பட்டன.

சரியாக 12.50 மணிக்கு எடின்பரோ வேவெர்லி தொடரூந்து நிலையத்தை சென்றடைந்த மக்கள் தமது கைகளில், "சுதந்திர தமிழீழத்திற்காக" எனும் எழுத்துடன் தமிழீழ தேசம் பொறிக்கப்பட்ட பலூன்களுடன் நிலையத்தை விட்டு வெளியில் வரிசையாக வரத் தொடங்கினர். முதல்நாள் இரவு பேரூந்தில் புறப்பட்ட நூறு தமிழீழ மக்களும், ஸ்கொட்லாந்தின் பல பகுதிகளில் வாழும் தமிழீழ மக்களும் அங்கு கூடத் தொடங்கிய போது மக்கள் தொகை ஆயிரத்திற்கும் அதிகமாகியது.

## இனமான உணர்வோடு அமைதிப் பேரணி

தொடரூந்து நிலையத்திலிருந்து அமைதிப் பேரணி ஆரம்பமாகியது. பேரணியின் ஆரம்பத்தில் ஸ்கொட்லாந்து கலைஞர் ஒருவர் அவர்களின் தேசிய உடை அணிந்து ஸ்கொட்லாந்தின் தேசிய இசையாகிய 'பாக் பைப்பர்' இசையை இசைத்து தமிழீழ மக்களை வரவேற்றார். அதை அடுத்து தமிழீழத் தேச மக்களின் தவில் – நாதஸ்வர இசைக் கலைஞர்கள் கானமழை பொழிந்து ஸ்கொட்லாந்து தேச மக்களின் நெஞ்சங்களை குளிர்வித்தனர்.

அதனை அடுத்து, ஒரு



வரிசையில் ஐவர் என்ற ரீதியில் தமிழீழ மக்களின் அமைதிப் பேரணி தொடங்கியது. ஸ்கொட்லாந்து 'பாக் பைப்பர்' இசையும், தமிழீழ இசையும் முன்னே செல்ல சந்திரிகா அரசின் இனஅழிப்புக் கொடுமைகளை மனித உரிமை மீறல்களை எடுத்து விளக்கும் சுலோக



அட்டைகளையும், தமிழீழ மக்களின் விடுதலைப் போரையும் அதற்கான நியாயத்துவத்தையும் விளக்கும் அட்டைகளையும் தாங்கியவண்ணம் மக்கள் அணிநடையிட்டனர்.

## பரிவோடு உறவாடி வாழ்த்தினர்

ஊர்வலம் செல்லும் பாதைகளில் நின்ற மக்கள் பலர் பரிவோடு ஊர்வலத்தில் சென்றவர்களுடன் உரையாடி விளக்கம் பெற்றனர். தமிழீழச் சிறார்கள் மலையேற்றப் பகுதிகளில் சிரமத்துடன் நடந்து செல்கிறார்கள். கால் இழந்த நிலையிலும் இன உணர்வுடன் இளம் தமிழீழப் பெண் ஒருவர் ஊன்றுகோல் துணையுடன் தன் தேச மக்களுக்காக மிகச் சிரமத்துடன் நடந்து செல்கின்றார்.

பார்வையாளர்களாக நின்ற ஸ்கொட்லாந்து இன தாய் ஒருவருக்கு தொண்டர் ஒருவர் தமிழீழ – ஸ்கொட்லாந்து நாட்காட்டி கொடுக்கப்பட்ட பொழுது மனநிறைவுடன் "உங்கள் நாட்காட்டி கிடைத்தமைக்கு நன்றி. ஆனால் இது இல்லாமலே உங்கள்

தொடர்ச்சி 15 ம் பக்கம்...

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax 718-623-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1983, Fax 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 438 81142, F 438 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224